ம் ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 17 புதன்கிழமை (01.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

மீளக் குடியமர்தலுக்குப் பின்பே அரசியல் தீர்வு

ட்கப்பட்ட பகுதிகளைப் பாதுகாக்க

0 ஆயிரம் பேர் படையில் இணைவர்



அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிபடைந்துள்ளபோதும் பலமான பாதுகாப்புப் படைகள் நாட்டுக்கு அவசியம் என்பதால். மேலும் 50 ஆயிரம் பேர் முப்படைகளுக்கும் பொலிஸ் சேவைக்கும் புதிதாக சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர். இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்திய பின்பே அரசியல் தீர்வு பற்றி சிந்திக்கப்படும் என தேசிய பாதுகாப்பு பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

புதுக்குடியிருப்பில் நீர்மூழ்கி வெடி குண்டு

(கொழும்பு)

கப்பலை மூழ்கடிக்கும் பாரிய நீர்மூழ்கி வெடிகுண்டுகள் இரண்டும் அதனை ஏவும் கருவியொன்றையும் இராணுவத்தின் 8-வது அதிரடிப்படையினர் புதுக்குடியிருப்பு பிரதே சத்தில் கண்டுபிடித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று தேடுதல் நடத்திய படையினர் நிலத்தின் கீழ் புதைத்து (12ஆம் பக்கம் பார்க்க)

லங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் றுத்த இந்தியா வழக்குத் தொடரவேண்டும்

ோஷமிட்ட அ.தி.மு.க. சட்டசபையிலிருந்து வெளியேற்றம்

(சென்னை)

ங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன் இந்தியா வழக்குத் தொடர தமிழக அரசு றுத்தக் கோரி சட்டமன்றத்தில் கோஷம் எழுப்பிய அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் தமிழக சட்டசபை அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் விரைவில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளதால் (12ஆம் பக்கம் பார்க்க)

டலின் கீழ் மின்சாரக் கேபிள்களை மைக்க இந்தியா–இலங்கை திட்டம்

(கொழும்பு)

ந்தியாவும் இலங்கையும் பரஸ்பரம் களை மேலும் வலுவூட்டுவதற்கான க்கைகளை எடுத்துள்ளன.

ந்த முயற்சியில் இந்தியாவிலிருந்து ரம் பெறுவதற்கென ஆசியாவிலே ய முறையிலான கடலின் கீழ் கேபிள் ர்புகளை ஏற்படுத்தும் சாத்தியத்தை ஆராய்வதற்கென புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் இரண்டு அயல் நாடுகளும் விரைவில் கைச்சாத்திட இருக்கின்றன.

இதற்கான நகல் உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்றும் விரைவில் அது கைச்சாத்திடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தெற்காசிய (12ஆம் பக்கம் பார்க்க)

மீட்டெடுத்த நாட்டை காட்டிக் கொடுக்க இடமளியேன்

ஜனாதிபதி மகிந்த சபதம்

(கொழும்பு)

இராணுவ வீரர்களுடன் மீட்டெடுத்த இந்த நாட்டை மீண்டும் காட்டிக்கொடுப்பதற்கு யாருக்கும் இடமளிக்க மாட்டேன். மகிந்த சிந்தனை மூலம் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயலாற்றுவேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சிறிலங்கா (12ஆம் பக்கம் பார்க்க)

ள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரி சிரியர் குழுவினால் தயாரிக்கப் க.பொ.த. உயர்தரப் பரீட்சை பௌதிகவியல் பகுதி- I

நாளை

ஆம் ஆண்டு மைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

பயங்கரவாத ஒழிப்பில் 22 ஆயிரம் புலிகள் பலி

10 ஆயிரம் பேர் கைது -உதய நாணயக்கார

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் மனிதாபிமான நடவடிக்கையில் 22 ஆயிரம் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 10 ஆயிரம் புலிகள் கைது செய்யப்பட்டும் சரணடைந்தும் உள்ளனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

இந்திய வெளியுறவு செயலராக நிரூபமா ராவ் நியமிக்கப்படுவார்

(டெல்லி)

இந்திய மத்திய வெளியுறவுத்துறை செயலர் எஸ்.சிவ்சங்கர் மேனன் யூலை 31ம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளதையடுத்து புதிய வெளியுறவுத்துறை செயலராக முன்னாள் இலங்கைக்கான தூதுவராக பணியாற்றிய நிரூபமா ராவ் நியமிக்கப்படவுள்ளார்.

மேனன் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து அடுத்த வெளியுறவுத் துறைச் செயலராக முன்னாள் (12ஆம் பக்கம் பார்க்க)

அரச சமாதான செயலகத்திற்கு இந்த மாத இறுதியில் மூடுவிழா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்ட சமாதானப் பேச்சுக்களுக்குத் துணை புரிவதற்காக அமைக்கப்பட்ட அரச சமாதான செயலகம் இந்த மாத இறுதியுடன் மூடப்படவிருக்கின்றது.

ஜனாதிபதி செயலகம் இதற்கான உத்தரவை பிறப்பித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சமாதான செயலகம் மூடப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக நாம் கடந்த வாரத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வகுப்பு தொழிலாளர்களுக்கு ஒய்வூதிய வசதி

அமைச்சர் டக்ளஸ்

யாழ் .குடாநாட்டிலுள்ள வகுப்பு தொழிலாளர்களது எதிர்கால நன்மைகருதி ஓய்வூதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.வகுப்பு தொழிலாளர்களது சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த 28 ஆம் திகதி அமைச்சரை



அவரது யாழ். பணிமனையில் சந்தித்து கலந்துரையாடினர். இதன் பிரகாரம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய சமூகப் பாதுகாப்பு சபையின் மூலம் மேற்படி ஓய்வூதிய வசதிகள் வழங்கப்படவுள்ளன.

இதே நேரம் மேற்படி தொழிலாளர்களது சங்கத்தை பதிவு செய்து கொள்ளல், சங்கத்திற்கான நிரந்தர கட்டிடமொன்றை அமைத்துக் கொள்ளல், விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் தொழிலுக்கேற்ப ஊதியத்தை பெறல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டதுடன் சங்கத்தின் பதிவு நடவடிக்கைகள் முடிபு பெற்றதும் ஏனைய அனைத்து தேவைகளையும் படிப்படியாக நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார். (ந-5)

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் 'இராணுவ வெற்றி' பேசத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை மற்றும் வவுனியா நகரசபைத் தேர்தல் பிரசாரங்களின் போது இராணுவ வெற்றிகளைப் பயன்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது. இது தொடர்பில் விசேட அறிவித்தலொன்றை தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் லஷ்மன் குலுகல்ல விடுத்துள்ளார்.

சுவரொட்டிகள், பதாகைகள் அல்லது ஊடகங்களில் எந்தவொரு வேட்பாளரும் இராணுவத்தினரின் பிரதிமைகளைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் தேர்தல் பிரசாரங்களில் இத்தகைய படங்களை பயன்படுத்த விரும்பும் தேர்தலில் போட்டியிடுகின்ற முன்னாள் இராணுவ அதிகாரிகள் எழுத்து மூலமான அனுமதியைப் பெறவேண்டுமெனவும் அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் தேர்தல் பிரசாரங்கள் எதுவும் நடைபெறவில்லையெனத் தேர்தலைக் கண்காணிக்கும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது. தேர்தல்கண்காணிப்புத் தொடர்பில் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் பணிகளை ஆரம்பித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் கபே அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன், தமக்கு கிடைத்த தகவலின் படி இந்த இரு மாவட்டங்களிலும் தேர்தல்களுக்கான கூட்டங்களோ அல்லது ஊர்வலங்களோ எவையும் நடைபெறவில்லையெனவும் கூறினார். எனினும் வவுனியா நகர சபைத்தேர்தல் தொடர்பில், எதிர்க்கட்சியினரும், அரசாங்கத் தரப்பினரும் தேர்தல் கூட்டங்களை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

மீட்கப்பட்ட பகுதிகளைப்...

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடை பெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது ,

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் முடிந்துவிட்டால் படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படுமா என்றொரு கேள்வி எழுகின்றது. எனினும் அவ்வாறு நடைபெறாது.

இனி இராணுவத்தினருக்கு வேலையில்லை. அவர்கள் வீடு செல்ல வேண்டியதுதான் என சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். இது தவறான கணிப்பீடாகும். மூன்று தசாப்தங்களாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்காத 16 ஆயிரம் சதுரக் கிலோ மீற்றர் நிலப்பரப்பு இப்போது முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

எனவே இங்கு பாதுகாப்பை மேலும் பலப்படுத்த பலம்வாய்ந்த கூடுதலான படையினர் தேவைப்படுகின்றனர். அதற்காகவே முப்படைக்கும் பொலிஸ் சேவைக்கும் புதியவர்களைச் சேர்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பாக கலந்தாலோசிக்கப் பட வேண்டும். நாட்டில் நிலவும் மனிதாபிமான நெருக்கடிகள் நாட்டுக்கும், அரசாங்கத்திற்கும் ஒரு சவாலாக உள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் கெஹலியரம்புக்வெல, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்களிலுள்ள 3 இலட்சம் மக்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டுவருவது தற்போது முக்கியமான விடயமாகும்.

தற்போது முகாம்களிலுள்ளவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகவும் உணவினை அவர்களே குடும்பங்களாக சமைத்து உண்ணக் கூடிய அளவுக்கு பல வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பல அரசியல் கட்சிகள் பலவாறு யோசனைகளை முன்வைக்கின்றன. சிலர் 13-வது சட்டமூலத்தை அமுல்படுத்த வேண்டும் என்கிறார்கள். அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசுகிறார்கள். சிலர் அரசியல் ரீதியான தீர்வே சிறந்தது என்கிறார்கள். இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்களிலுள்ள 3 இலட்சத்துக் கும் அதிகமான மக்களை அவர்களது சொந்த இடங்களில் விரைவில் மீளக் குடியமர்த்துவது இன்று அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளபோது பல அரசியல் கட்சிகள் 13-வது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டு மெனவும் அதிகாரப் பகிர்வு குறித்தும் பேசுகின்றன. எனினும் இடம்பெயர்ந்தோர் அவர்களது சொந்த இடங்களில மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் 13-வது திருத்தச் சட்டமூலம் குறித்தும் அதிகாரப் பகிர்வு அரசியல் ரீதியான தீர்வு குறித்தும் அரசாங்கம் கலந்துரையாடத் தயாரான நிலையில் உள்ளது என்றார். (ந-5)

முத்தமிழ் விழா

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையால் நடத்தப்படும் முத்தமிழ் விழா இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு விவேகானந்தா மண்டபத்தில் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கமநல சேவை திணைக்களத்தின் ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர் நா.குழந்தைவேலு கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக தமிழ்த் துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-4)

மாகாண பாடசாலையில் நியமனம்

தே.க.கல்லூரி பட்டதாரிகளுக்கு இன்று முதல் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரியில் சித்தியடைந்து தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றிய தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகளை மாகாண பாடசாலைகளில் நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்று முதல் யாழ் .மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள் உரிய ஆவணங்களுடன் அவற்றின் பிரதிகளை ஓர் கோவையிலிட்டு இணைத்து எடுத்து வருமாறு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வேதி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். இவ்வாறு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு

நடனம்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி- ஜி.டொன்பாஷா, ரீ.ஜெயரஞ்சினி, கே.மைதிலி, எஸ். உதயபாரதி

நாடகமும் அரங்கியலும்

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி-ஆர்.அனுஷா,எம்.எம்.ஏ.தெரேசா,

முதல் மொழி

தர்க்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி-கலைவாணி

மனையியல்

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி-என். யுசினா டமிலி

இஸ்லாம்

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற்கல்லூரி-எம்.எம்.அன்வாஸ்

கணிதம்

மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி-என்.விஜிந்தன் ,ரீ.சுஜிகரன்,

சங்கீதம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி-கே.அஜந்தினி, ஆர்.கமலவேணி, ஆர்.கார்த்திகா

உடற்கல்வி

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி-கிருசாந்தி, டெனின் கிறீஸ்ரி, ரீ.மோகனப் பிரியா

ஆரம்பக்கல்வி

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி-எஸ். நராயினி, என்.சுதா, பீ.விஜயவர்த்தனி,

மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி- எஸ். சித்திரா

விஞ்ஞானம்

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி-எம்.அம்பிகைபாகன், வீ.ராதிகா, ஜீ.துமிசன்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி-எஸ்.ஜெயந்தினி, என்.மயூரினி, என்.நிரோபா, ரீ.கோகுலன்

சமூகக் கல்வி

மட்டு.தேசிய கல்வியியற்கல்லூரி- எஸ்.லக்சுமி பிரபா,

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி- வி.மண்டலேஸ்வரன்

விசேட கல்வி

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி- ஈ.அஜந்தினி, ரீ.யதுகுலதரன், ஜே.யசீபன், கே.ராகுலன், கே.சிவதர்சினி, ஆர்.சோபிகா,வி.வனஜா, யோகராணி

தர்க்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி-வி.கார்த்திகா

தமிழ்

மட்டு.தேசிய கல்வியியற்கல்லூரி- கலைச்செல்வி, வை.முகுந்தன்

தர்க்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி- எஸ்.தேனுகான்பி

தொழில் நுட்பம்

மட்டு. தேசிய கல்வியியற் கல்லூரி-எஸ்.கிருஸ்ணசீலன் (ந-5)

மரண அறிவித்தல்

அமரர் நடராசா கனகரத்தினம்

(ஸ்தாபகர் கஜன் குறூப் திருநெல்வேலி)

முன்னாள் பெருந்தோட்ட மேற்பார்வையாளர், தலவாக்கலை

(Founder of " ANVIL")



ஆடியபாதம் வீதி, அரசடி அம்மன் கோவிலடி , திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகரத்தினம் அவர்கள் நேற்று (30.06.2009) காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்றவர்களான நடராசா, செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், விமலா தேவியின் அன்புக்கணவரும் , சுதாகர், கண்ணன், காலஞ்சென்ற சந்தர் மற்றும் கவிதா, கதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நாகேஸ்வரியின் பாசமிகு மாமனாரும், கனகலிங்கம்,சோமசேகரம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பகல் 1 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் , நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

" The Nest"
Arasady Amman Kovil view,
Adiyapatham Road, Thirunelvely

தகவல் ,
குடும்பத்தினர்

(C-2690)

வளரட்டும் ! தொடரட்டும் ! உங்கள் சேவை

திரு.செல்லையா இளங்கோ (SLPS-2-II)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின்
கொளுகொம்பாய் இருந்தீர் அபிவிருத்திக்கு
செயலாளராகி ஆற்றிய சேவைகளால்
சேர்ந்தன நற் புகழ் நம் பாடசாலைக்கு

விஞ்ஞானத் துறைக்கோர் வித்தகனாய்
விருப்புடன் பணியாற்றிய தாங்கள்
இன்று ... முதல்
நல்லதிபராய் சேவையாற்றி
நற்புகழ் பெற வாழ்த்துக்கள் கோடி
வளரட்டும் , தொடரட்டும் உங்கள் சேவை !

அதிபர் , ஆசிரியர்கள் ,
பாடசாலை அபிவிருத்திச் சங்க
உறுப்பினர்கள்.
யா/கொக்குவில் இந்து ஆரம்ப
பாடசாலை.

(2897)

இன்று ஒரு தகவல்

மாயை

நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

"இந்த உலகத்தை மகான்களெல்லாம் 'மாயை' என்று சொல்கிறார்களே. அதை நான் நம்ப மாட்டேன் என்றார் அவர்.

"என்ன திடீரென்று இப்படிச் சொல்கிறீர்கள்?" என்றேன்.

"இந்த உலகத்தில் எவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது இதைப் போய் மாயை என்று சொன்னால் எப்படி?" என்றார்.

'மாயை' என்றால் ஏதோ அடியோடு இல்லாத ஒன்று என்று அவர் நினைக்கிறார் அதனால் அப்படிச் சொல்கிறார்.

'மாயை' என்று அடியோடு இல்லாத ஒன்று இல்லை. முயல் கொம்பு, குதிரை கொம்பு என்று சொல்கிறோம் அல்லவா. அப்படி ஒரு பொருள் அடியோடு இல்லை.

ஆனால் மாயை என்பது இருப்பதாக நினைக்கும் வரைக்கும் இருப்பதாகவே தோன்றும்.

'கானல்' நீர் மாதிரி. கானல் நீர் கண்ணுக்குத் தெரியும். அதாவது தூரத்தில் தண்ணீர் இருப்பது போல் தோன்றும். அங்கு தண்ணீர் இருக்காது. இருந்தாலும் தண்ணீர் இருப்பது போலவே தோன்றும். அதுதான் மாயை.

ஒரு கயிறு கீழே கிடக்கிறது. இருட்டு நேரத்தில் அதைப் பாம்பு என்று தவறாக நினைத்து விடுகிறோம். அப்பொழுது என்ன ஆகிறது?

நிஜமான பாம்பு உண்டாக்கும் அத்தனை பயத்தையும் பதற்றத்தையும் அது நம்மிடம் உண்டாக்கி விடுகிறது.

அதே மாதிரி... உலகம் உண்மையிலேயே நிரந்தர சத்தியமாக இல்லையென்றாலும் கூட, அதை நாம் சத்தியமாக நினைக்கும் வரைக்கும் அதுமாதிரியே எல்லா காரியங்களும் நடக்கிறது.

நாம் கனவு காண்கிறோம். கனவு காணும் வரைக்கும் அந்தக் கனவு நிஜமாகத்தான் இருக்கும். விழித்துக் கொண்டால் அது 'ஒன்றுமில்லை' என்று ஆகிவிடும்.

நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் உலகம் மெய்யாக இருக்கும். நாம் ஞான நிலையில் முழித்துக் கொண்ட பின்னர் அது மறைந்து விடும்.

அதனால் இந்த உலகத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் தாமரை இலையில் தண்ணீர் போல் வாழ வேண்டும் என்கிறார்கள் பெரியவர்கள்.

ஒட்டாமல் வாழும் வாழ்வு அது. தாமரை இலை, தண்ணீரில் தான் இருக்கும். இருந்தாலும் தண்ணீர் இதில் ஒட்டாது. ஒரு துளி அதன் மேல் விழுந்தாலும் அது நிற்காது ஓடிப் போய்விடும்.

இந்தக் காலப் பிள்ளைகள் அதற்கு புதுவிளக்கம் கொடுக்கிறார்கள்.

கொஞ்ச நாளைக்கு முதல் ஒரு சின்னப் பையன் என்னிடம் வந்து, 'இன்று ஒரு தகவலில் என்னென்னமோ சொல்கிறீர்களே... தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன் தெரியுமா? சேர்? என்று கேட்டான்.

"நீயே சொல்லப்பா" என்றேன்.

"தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன்னா... அதுக்குக் கால் கிடையாது" என்றான்.

உலகமே மாயம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

யாழ்ப்பாண வலய மட்ட கணித வினா விடை போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலய ரீதியாக நடத்தப்பட்ட தரம் - 06 தொடக்கம் 11 வரை தமிழ்மொழி, ஆங்கில மொழி மூலம் நடாத்தப்பட்ட கணித வினா விடைப் போட்டி முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் ஒவ்வொரு தரத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

தமிழ் மொழி மூலம்

தரம் - 6

சு. சுவானிலா, க. மதினி ம. பிரியந்தி (வேம்படி மகளிர் கல்லூரி).

தரம் - 7

ரா. கீர்த்திகா - வேம்படி மகளிர் கல்லூரி, ப. மெஸிகன் - இந்துக் கல்லூரி, பி. ஹகரனி - வேம்படி மகளிர் கல்லூரி.

தரம் - 8

சி. பாவனா - வேம்படி மகளிர் கல்லூரி, சி. சர்வகனன் - இந்துக் கல்லூரி, உ. தேனுகா - வேம்படி மகளிர் கல்லூரி.

தரம் - 9

க. தரண்யா - வேம்படி மகளிர் கல்லூரி, பி. குணாவரன் - இந்துக் கல்லூரி, செ. காஞ்சனா - வேம்படி மகளிர் கல்லூரி.

தரம் - 10

இ. லக்ஷியா - வேம்படி மகளிர் கல்லூரி, க. குருபரன், ர. பிரணவன் - இந்துக் கல்லூரி.

தரம் - 11

சி. அமுதீசன், பா. ஜனார்த்தன சர்மா - இந்துக் கல்லூரி, ஜெ. ஆன்ரோன் நிசாந்தன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி.

ஆங்கில மொழி மூலம்

தரம் -6

சி. சிவானுஜா, ந. சரண்யா - வேம்படி மகளிர் கல்லூரி, பு. றெனோஜன் - ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்.

தரம் - 7

ஜெ. அபிராமி - வேம்படி மகளிர் கல்லூரி, யோ. சங்கவி - கரந்தன் ராமபிள்ளை வித்தியாலயம், ம. நுலுஜா - வேம்படி மகளிர் கல்லூரி.

தரம் - 8

சி. தனுசன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, மு. பவித்திரா - வேம்படி மகளிர் கல்லூரி, கு. விந்துஜன் - அரியாலை ஸ்ரீ பார்வதி.

தரம் - 9

பா. கௌசல்யா, தி. பிரணவி- வேம்படி மகளிர் கல்லூரி, கு. தர்மிஜா - ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்.

தரம் - 10

ந. லவலோஜன், ச. ராம்ராஜ் - இந்துக்கல்லூரி, ந.பிருந்தா - வேம்படி மகளிர் கல்லூரி

தரம் - 11

யோ. ஜனுர்ஸ் - சென் ஜோன்ஸ் கல்லூரி, மி. மிதுரிகா, பா. சங்கீதா - வேம்படி மகளிர் கல்லூரி. (ஓ-7)

விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வசந்தம் தொழில்நுட்ப பயிற்சித் திட்டத்தின் கீழ் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் மூன்று பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

வீட்டு மின்னிணைப்பு, முச்சக்கர வண்டி பேணுதல், பழுதுபார்த்தல் பயிற்சி நெறி, தனியார் மற்றும் அரச காரியாலயங்களில் பணியாற்றும் சாரதிகளுக்கான விசேட பயிற்சி நெறி என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் சேர விரும்புவோர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், க.பொ.த. சா/த தர சான்றிதழ் பிரதிகளுடன் முத்திரை அளவுடைய 2 புகைப்படங்களையும் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பித்து இன்னும் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் மேற்படி ஆவணங்களை சமர்ப்பித்து தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதோடு பயிற்சிகளிலும் கலந்துகொள்ளுமாறும் தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் ந. யோகராஜன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

இராசி பலன்

01.07.2009

(ஆனி 17, புதன்கிழமை)

நவமி முற்பகல் 9.25 மணிவரை

சித்திரை பிற்பகல் 3.39 மணிவரை

இராகுகாலம் 11.56-1.26 மணிவரை

சுபநேரம் 4.26-5.56 மணிவரை

மேடம்	தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, நல்ல வரவேற்பு, உடல் நலம்.
இடபம்	செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், ஆரோக்கிய நிலை, சுவாரஸ்யம்
மிதுனம்	உஷ்ண நிலை, குடும்பக் கவலை, காரிய இடையூறு, பணக்குறைவு.
கடகம்	கல்வியில் ஆர்வம், சுபசெலவு, அதிக பிரயாசை, உறவினர் சந்திப்பு.
சிங்கம்	அந்நியர் சந்திப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், கீர்த்தி.
கன்னி	கடின வார்த்தை, வேலைச் சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம்.
துலாம்	தொழில் நன்மை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், சிந்தனை மிகுதி.
விருச்சிகம்	சயன சுகக் குறைவு, மனஸ்தாபம், கடின முயற்சி, தனவிரயம்.
தனுசு	முயற்சி கைகூடும், பெருமையடைதல், கலந்துரையாடல், பொருள் சேர்க்கை.
மகரம்	எடுத்த காரியம் கைகூடும், சுபநிகழ்வு, குடும்ப நன்மை, நல்ல செய்தி.
கும்பம்	சரீரப் பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், கற்பனை மிகுதி.
மீனம்	எதிர்பாராத பகை, காரியதடங்கல், போசன சுகம், வாகன பயம்.

வளவன்

கலாசார மற்றும் இலக்கிய போட்டிகளை நடத்துவதற்கு சமுர்த்தி அதிகார சபை நடவடிக்கை

(கொழும்பு)

சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்களுக்கிடையில் கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை சமுர்த்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாட்டு, நடனம், சிறுவர் நாடகம், சித்திரம் மற்றும் பேச்சு ஆகிய துறைகளில் திறமை மிக்க சிறுவர்களை தெரிவு செய்யும் பொருட்டு 05 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பங்குபற்றும் விதத்தில் இலக்கியப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் திறமை மிக்கவர்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி வலய ரீதியாகவும், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட மட்டத்திலும் தேசிய ரீதியாகவும் சிறந்த இலக்கிய ஆற்றல் மிக்க சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

உள்ளூரில் போட்டிகள் யாவும் முறையாக நடத்தி முடிக்கப்பட்டு தேசிய மட்ட போட்டிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று சமுர்த்தி அதிகார சபை கேட்டுள்ளது. (ஓ-4)

குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	யாழ்ப்பாணம்	சாவகச்சேரி
1 Kg	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	40	60	40
உருளைக்கிழங்கு	150	170	150
பச்சைமிளகாய்	40	60	60
தக்காளி	300	400	--
மரவள்ளிக்கிழங்கு	50	70	60
கோவா	120	140	--
கரட்	80-120	80-130	100
பூசணி	30	40	30
புடோல்	40	45	30
வாழைக்காய்	50	70	70
சின்ன வெங்காயம்	50	60	40-50
பெரிய வெங்காயம்	100	120	100
பாகற்காய்	70	100	80
வெண்டிக்காய்	30-40	40-50	60
கரணைக் கிழங்கு	80	--	--
பயிற்றங்காய்	60	75	50
லீக்ஸ்	100	120	120
பீற்றூட்	60	60	60
கறிமிளகாய்	40	60	60
முருங்கைக்காய்	400	500	450
கீரை - 1 பிடி	20	20	10
தேசிக்காய்	100	160	140
தேங்காய் (ஒன்று)	25	35	25

சைவ நெறிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட மட்ட சைவ நெறிப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி யில் நடைபெறும் என்று வலயக்கல்வி அலு வலகத்தின் சைவ நெறிப் பாட பிரதிப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ஓ-30)

கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தினால் நடத்தப்படும் க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களுக்கான கருத் தரங்கு எதிர்வரும் 4ஆம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு துன்னாலை ஆலை யம்பதி ஆலய வடிவேலர் மணிமண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் த. அஜந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஈழத்து தமிழ் நாவல் வளர்ச்சி என் னும் விடயத்தில் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரம் சிறப்புரை யினை வழங்கவுள்ளார் இதில் இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை கலை இலக் கிய சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ-4)

ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய முழு நேர டிப்ளோமா கற்கை நெறிக்கு புதிதாக இணைக்கப்பட்டுள்ள மாண வர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர் வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக இயக்குனர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கை நெறிக்காக இம்முறை 50 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட் டுள்ளதாகவும் அவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைத்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-30)

கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

வலி மேற்கு பிரதேச செயலக விதாதா வளநிலையத்தினால் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன நிதியுதவியில் நடைபெறவுள்ள MS Office, DTP ஆகிய பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு க.பொ.த. சா/த அல்லது அதற்கு மேல் தகுதியுடைய வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வலிமேற்கு பிரதேச செயலக பிரிவிற்குள் வசிக்கும் தகுதியுடையவர்கள் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை கிராம உத்தியோகத்தர் மூலம் உறுதி செய்து சங் கானை பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி அல்லது அதற்கு முன் ஒப்படைக் குமாறு வலி மேற்கு பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி வட்டு இந்து நவோதய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி. ஜெ. அருள்மயம் தலைமை யில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

ஆளுமை விருத்திக்கான அரங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத் தில் ஆளுமை விருத்திக்கான அரங்க நிகழ் வுகள் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் நெறிப்படுத்தலில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை வித்தியாலய அதிபர் ம. சிவபாலசுந்தரம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்ப உதவிக் கல்விப்பணிப்பாளர் பூ. குக தாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-4)

"ஸ்ரீ- தட்சணாமூர்த்தி வழிபாடு" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் வெளியிடும் "ஸ்ரீ தட்ச ணாமூர்த்தி வழிபாடு" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை உரையை ஆசிமட விநாயகர் ஆலயத் தலைவர் த.இ.பாலசுந்தர மும், வாழ்த்துரைகளை ஆலய குரு இ. இரா மலிங்க சர்மா, நல்லை திருஞான சம்பந்தர், ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. மாதவகுமார், சட்டத்தரணி த. வேலாயுதம், ஓய்வு பெற்ற அதிபர் செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு, ஆகியோரும் சிறப்புரையை கோப்பாய் றோ.க.பாடசாலை, அதிபர் ச. லலீ சனும் வளவுரையை ஓய்வு பெற்ற விரிவுரை யாளர் சிவமகாலிங்கமும், நூலாசிரியர் உரையை திருமதி மனோன்மணி குலசிங்க மும் வழங்கவுள்ளனர். நூலினை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை ஆலய பிரதம குரு இ. ரமணிதரக்குருக்கள், த.இ. பாலசுந்தரன் ஆகியோர் பெறவுள்ளனர்.

இந்நூல் வெளியீட்டில் பெறப்படும் அன் பளிப்புகள் யாவும் மக்கள் நலன்புரி நிலை யத்திற்கு வழங்கப்படவுள்ளதாக ஆலய நம் பிக்கைப் பொறுப்பாளர் சபை தெரிவித்துள் ளது. (ஓ-4)

க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கரவை ஒன்றியவெளிநாட்டுக்கிளையின் அனுசரணையுடன் கரவெட்டி ஸ்பேர்ஸ் விளை யாட்டுக்கழகத்தினால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்தரங்கு தொடர்பில் எதிர்வரும் 4 ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி க்கு யாழ் பல்கலைக்கழக பௌதீகவியற் துறைத் தலைவர் என். சிவயோகன், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர்பி. சிவ குமார் ஆகியோர் பௌதீகவியல் பாடக்கருத் தரங்கினை நடத்தவுள்ளதுடன் அடுத்து 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புள்ளிவிபர வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். ஸ்ரீ சற்குணராஜா இணைந்த கணித பாட கருத்தரங்கிணையும் யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறைவிரிவுரையாளர் கே. கஜபதி யாழ் பல்கலைக்கழக தாவரவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர் கபிலன் ஆகி யோர், உயிரியல் பாட கருத்தரங்கினையும், யாழ் பல்கலைக்கழக இரசாயனவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ரி மனோறஞ்சன் இரசாயனவியல் பாடக் கருத்தரங்கினையும் நடத்தவுள்ளனர். (ஓ-4)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு வருகை தந்த பிரமுகர்கள் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுடன் நிற்பதையும், விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. சித்திர வடிவேல் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு. யூட்நிக்சன் அடிகளார் ஆகியோரை அதிபர் மு. விக்னேஸ்வரன் அழைத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம். படங்கள் : கோப்பாய் செய்தியாளர்.

அலங்கார உற்சவம்

சுன்னாகம் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ சொர்ண வரத பத்திரகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் 4 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு நடைபெறும். தின மும் காலை 10 மணிக்கு அபிஷேகம் ஆரம் பமாகி பகல் 11 மணிக்கு விஷேட பூசையும் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு சா ரட்சை பூசையும் தொடர்ந்து 6 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நடைபெற்று அம்பாள் உள் வீதி, வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம் பெறும்.

14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடை பெற்று 12 மணியளவில் நவசக்தி அர்ச்சனை யும் இடம் பெறவுள்ளது. (ஓ)

தமிழ்த் தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் கல்வி வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

பழைய மாணவர் சங்க பணிமனை திறப்பு விழாவும் உலக கணனி வலைப்பின்னலில் இணைதலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலய பழைய மாணவர் சங்கத்தினால் சங்கத்தின் பணி மனை திறப்பு விழாவும் உலக கணனி வலைப்பின்னலில் இணை தலும் நிகழ்வு நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு சங்கத் தலைவர் வி.கே. கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக யாழ். பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் வ. சண்முகநாதமுதலி, யாழ். தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமை யாளர் அ. தெய்வேந்திரன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதம விருந்தினரான மக்கள் வங்கி முகாமையாளர் பணிம னையை திறந்து வைப்பதுடன் மூத்த பழைய மாணவர் செ. ப. ஜீவானந்தம் கணனி வலைப் பின் னலை ஆரம்பித்து வைக்கவுள் ளார்.

கணனி வலைப் பின்னலை இணையப் பக்க வடிவமைப்பா ளர் த. தவரூபன் கையளிக்கவுள்ளார். (ஓ-4)

மீளக் குடியமரவுள்ளோர்க்கான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய இடங் களில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் மீளக் குடி யமர்வு தொடர்பாக ஆராயும் பொரு ட்டு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகா விஷ்ணு சன சமூக நிலையத்தில் சந்திக்கவுள் ளனர்.

தயவு செய்து அப்பகுதியைச் சேர்ந்த அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கச் செயலாளர் கேட்டுக் கொள்கின் றார். (ஓ)

கண்ணீர் அஞ்சலி

உயர் திரு. வைத்திலிங்கம் கணேசலிங்கம்

யாழ். சதுரங்க கழகத்தின் ஸ்தா பகரும், யாழ். மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டைப் பிரபல்யப்படுத்தி அதன் வளர்ச்சிக்கு அரும் பணி யாற்றியவருமான உயர் திரு வைத் திலிங்கம் கணேசலிங்கம் அவர்க ளின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும் பத்தவர்களுக்கும், சதுரங்க ஆர்வ லர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

அங்கத்தவர்கள்
யாழ். சதுரங்க சம்மேளனம்.

2896

ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் நடவடிக்கை குறித்து அரசு அதிருப்தி

ஒத்துழைப்பு வழுங்கத் தவறியுள்ளதாக அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

மனித உரிமை விவகாரங்களை சரியான முறையில் நெறிப்படுத்துவதற்கேதுவானஒத்துழைப்பை நவநீதம்பிள்ளை வழுங்கத் தவறியுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பில் எப்போதும் கடுமையான விமர்சனங்களை மட்டுமே நவநீதம்பிள்ளை வெளியிட்டு வருகின்றார்.

நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகள் காரணமாக மனித உரிமைகள் பேரவையுடன் நெருங்கிச் செயற்படக் கூடிய வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.

இலங்கை குறித்த நிலைப்பாட்டில் மாற்றம் தேவையென அண்மையில் மனித உரிமைகள் ஆணையாளரை சந்தித்தபோதும் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இலங்கையில் மனித உரிமை கண்காணிப்பகமொன்றை அமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் அதனால் மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் கருத்துகள் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் வெளிப் படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். பணிகளை முன் னெடுப்பதற்காக நிதி எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றது. எவ்வாறான கண் காணிப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன போன்ற தகவல்களில் தெளிவில்லைஎன்றார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தினால் மனித உரிமை மீறல் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்படுவதாக தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை மற்றும் முன்னர் பதவி வகித்த லுயிஸ் ஆர்பர் ஆகிய இருவருமே குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யூலை 11 இல் வவுனியாவில் நடமாடும் சேவை

(கொழும்பு)

பொது நிர்வாக அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் சேவை நிகழ்வொன்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் எதிர் வரும் 11ஆம் திகதி நடை பெறவுள்ளது.

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் முதலாவதாக சகல அமைச்சுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் சமுகமளித்திருக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

சமூக சேவை, தொழில், நீர்ப்பாசனம், உள்நாட்டு நிர்வாகம், பாதுகாப்பு, உள்நாட்டுவியாபாரம்தொழிற் பயிற்சி, நீதி நிர்வாகம், கைத் தொழில் தேசிய ஒருமைப்பாடு தோட்ட உட்கட்ட மைப்பு, சிறுவர் பெண்கள் அபிவிருத்தி உள்ளூராட்சி மாகாண சபை, தபால், நீர் முகாமைத்துவம், கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, பதிவாளர் நாயகம், குடிவரவு குடியகல்வு திணைக்களம் ஆட்பதிவு திணைக்களம், ஓய்வூதியத்திணைக்களம், சமுர்த்தி ஆகிய அமைச்சுக்களின் அலுவலர்களும் திணைக்கள அதிகாரிகளும் கலந்துபொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் காணப்படும்.

இதற்கான ஒழுங்குகள் வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி. எஸ்.எம். சாள்ஸ் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஓ-4)

ஷெல், லாப் காஸ் விலையில் மாற்றம்

(கொழும்பு)

விலைச் சூத்திரத்தின் பிரகாரம் ஜுலை முதலாம் திகதி முதல் காஸ் விலையில் மாற்றங்கள் செய்யப் படஇருக்கின்றன.

உலகச் சந்தையில் கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஏற்பட்ட விலை மாற்றங்களின் அடிப் படையிலேயே காஸ் விலையில் மாற்றங்கள் செய்ப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விலைச் சூத்திரத்திற்கு ஏற்ப காஸ் விலையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஷெல், லாப் காஸ் நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ளன. (ஓ-4)

மரண அறிவித்தல்கள்

சிவப்பிரகாசம் பரமேஸ்வரி

கோட்டைக்காட்டைப்பிறப்பிடமாகவும்,சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பர மேஸ்வரி 28.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அன்னார் பிரபல வர்த்தகர் (N.K.S) சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, குபேரன் மற்றும் மகேந்திரன் (லண்டன்), கெங்காதேவி, பாலக்குமார் (சுவிஸ்), நாகேஸ்வரி, செல்வராணி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயும், மகாதேவன் (ஐங்கரன் ஸ்ரோர்ஸ் சங்கானை), வாசுதேவி குணசீதா (லண்டன்), பாலசுப்பிரமணியம் (பிரதம அத்தியட்சகர், தபாற்கந்தோர், கொழும்பு), தர்மகுலசிங்கம் (பொறியியலாளர்-கொழும்பு), குசேலினி (சுவிஸ்), அமிர்தலிங்கம் தயாபரன் (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 30.06.2009 செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்
குடும்பத்தினர்

திருமதி கதிரவேலு சரஸ்வதி

பளை, மாவிட்ட புரத்தைப் பிறப்பிடமாகவும் வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது சுன் னாகத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி கதிரவேலு சரஸ்வதி 29.06.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சீனி -லட்சுமி (சின்னத்தங்கம்) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், வசாவிளானை பிறப் பிடமாகக் கொண்ட முருகன் -கைராசிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், முருகன் கதிரவேலுவின் (இளைப்பாறிய ஊழியர், (CTB) அன்பு மனைவியும், உதயகுமாரன் (ஜேர்மனி), ஜெயக்குமாரன் (கனடா), உதயகலா (பிரான்ஸ்), ஜெயகலா (ஆசிரியர் சாவகச் சேரி இந்துக் கல்லூரி), கஜேந்திரகுமார், சுரேந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், துஷ்யந்தி (கனடா), கிருபானந்தன் (பிரான்ஸ்), ஜெயசிறி ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷாந், உமாலினி, ஷாலினி, அசோக், றெஸ்மி, துஷிக்கா, யதூசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற யோகவனம் மற்றும் முருகையா, காலஞ்சென்றவர்களான சிவராசா, சிவபாதசுந்தரம் மற்றும் சிவலோக நாயகி, சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அபிராமி மற்றும் கந்தையா, இரத்தினம், தெய்வானைப்பிள்ளை, வடிவேலன் (ஓய்வுபெற்ற அதிபர்)ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 30.06.2009 செவ்வாய்க் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அந்தோனியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

தகவல்
மு.கதிரவேலு, பிள்ளைகள்.

மரண அறிவித்தல்கள்

கனகசிங்கம் சிவபாலசுந்தரம்

(றோயல் அச்சக உரிமையாளர் வவுனியா)

சாவகச்சேரி கற்குழியைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக் கல்லை வதிவிடமாகவும் கொண்ட கனகசிங்கம் சிவபாலசுந்தரம் கடந்த சனிக் கிழமை 27.06.2009 வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கம் பராசக்தி தம்பதியினரின் மகனும், சு.செல்லமாவின் வளர்ப்பு மகனும், நவரத்தினம் (நகரசபை சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு சகோதரனும், பாக்கியவதியின் அன்பு மைத்துனரும், நிமல் (லண்டன்), சகிலா (அமெரிக்கா), கஜமுகன் (இந்தியா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.06.2009 திங்கட்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது. இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ சண்முகானந்தா வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்
க.நவரத்தினம் (சகோதரன்)

திருமதி புனிதவதி விஜயரட்ணம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி விஜயரட்ணம் 29.06.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் -நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், தம்பிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற விஜயரட்ணம் (சுகாதாரப்பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரவிகுலராஜன் (பட்டயக்கணக்காளர்)மற்றும் செளபாக்கிய கௌரி (பிரதி அதிபர் மகாஜனக் கல்லூரி), செந்தில் செல்வம் (கனடா), சோமஸ்கந்தன், திருமகள் (முன்னாள் கணக்கெழுத்தாளர், Carsons) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநாதன் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் அருணோதயக்கல்லூரி), ஜெயரட்ணம் (பொறியியலாளர் கனடா), திருமதி இ.இராஜேஸ்வரி (கொம்பியூட்டர் ரெக்கினிசன் கொழும்பு), ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற கணேசரட்ணம் முத்துக்குமாரசாமி அருணாசலம் மற்றும் திருமதி திலகவதி கதிர்காமசேகரம் திருஞானசம்பந்த மூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற புஸ்பதேவி, மரகதம், கதிர்காமசேகரம், யோகராணி ஆகியோரின் மைத்துனியும், செந்தூரன் (இன்போமேஷன் ரெக்னோலொயிற்ஸ், கனடா), சுபாஜி, றக்ஷா (யூனிவேசிற்றி, நியூயோர்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று 30.06.2009 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தம்மனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ம.பத்மநாதன்

தமிழ் மக்களின் மனதை வெற்றி கொள்வதே அரசாங்கத்தின் தற்போதைய இலக்கு

அமைச்சர் லக்ஷமன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு கடந்த அரசாங்கத்தை நிறுவப்போவதாக புலிகளின் உறுப்பினர் கே.பி பத்மநாதன் அறிவித்துள்ளமை தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளவில்லை. 30 வருடங்களாக முயற்சி செய்து இங்கு செய்ய முடியாததை எவ்வாறு சர்வதேசத்தில் செய்யப்போகின் றனர்? தமிழ் மக்களின் மனதை வெற்றி கொள்வதே அரசாங்கத் தன் தற்போதைய இலக்காகும்.

அதற்கான முயற்சிகளையே மேற்கொண்டுவருகின்றோம் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் அங்கு மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தகவல் வெளியிடுகையில் கூறியதாவது,

புலிகளின் சில உறுப்பினர்கள் தெரிவித்துவரும் நாடு கடந்த அரசாங்கம் என்ற விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அலட்டிக் கொள்ளவில்லை. கே.பி யை கைது செய்யுமாறு சர்வதேச பொலிஸாரை கோரியுள்ளோம்.

கடந்த 30 வருடங்களாக முயற்சித்து இலங்கையில் தனி அரசை நிறுவ முடியாமல் போன நிலையில் தற்போது வெளிநாடுகளில் இருந்து கொண்டு எவ்வாறு நாடு கடந்த அரசாங்கத்தை நிறுவ முடியும்?

தற்போது எங்கள் நோக்கம் தமிழ் மக்களின் மனதை வெற்றி கொள்வதாகும். அவர்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைப்போம்.

அதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றோம். ஆறு மாதகால திட்டங்கள் மற்றும் மூன்று வருட திட்டங்கள் என அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

பூநகரி வீதியை மூன்று மாத காலத்துக்குள் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஒரு கிலோ மீற்றர் தூரத்தை நிர்மாணிக்க ஒரு நிறுவனம் என்ற ரீதியில் 16 நிறுவனங்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாணத்தை

சிறப்பாக அபிவிருத்தி செய்வோம்.

எனவே நாடு கடந்த அரசாங்கம் என்ற விடயங்கள் குறித்து நாங்கள் குழம்பிக்கொள்ளவில்லை. நாங்கள் எங்கள் நோக்கத்தில் மிகவும் உறுதியாக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் மனதை வென்று அவர்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து விட்டால் அவர்கள் எந்தவிதமான நாடு கடந்த அரசாங்கம் குறித்தும் சிந்திக்க மாட்டார்கள். (ஓ-4)

றோயல் கல்லூரி, கொழும்பு -7

கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை –2009
வழிகாட்டல் பரீட்சை

பௌதீகவியல்-1 physics-1

38.வரிப்படத்தில் காட்டியவாறு கிடையாக உள்ள இரு சமாந்தரக் கம்பிகளின் மீது 4 cm நிகரநீளமும் 2 g திணிவுமுடைய கடத்தும் கோல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. கம்பியினூடு 1 A மின்னோட்டம் பாய்கின்றது. காந்தப்புலம் தளத்திற்கு செங்குத்தாக கீழ் நோக்கி 2 T உடைய இடத்தில் கோலில் தாக்கும் உராய்வு விசை 0.02N ஆயின் கோலின் ஆர்முடுகல்



1. 30 ms^{-2} இடம் நோக்கி 2.30 ms^{-2} வலம் நோக்கி
3. 40 ms^{-2} இடம் நோக்கி 4.40 ms^{-2} வலம் நோக்கி
5.. 300 ms^{-2} வலம் நோக்கி

39.விண்கல் ஒன்று புறக்கணிக்கத்தக்க கதியுடன் விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கிறது. திடீரென கோள் ஒன்றின் ஈர்ப்புப் புலத்தினுள் பிரவேசித்து கோளின் மேல் மோதுகின்றது. கோளிற்கு அருகில் மேற்பரப்பில் ஈரப்புலச் செறிவு g^1 ஆயின் விண்கல் அடிக்கும் கதி,

1) $\sqrt{2g'R^2}$ 2) $2g'R$ 3) $\sqrt{\frac{2g'}{R}}$ 4) $\frac{2g'}{R}$ 5) $\sqrt{2g'R}$

40.இருகோள்களின் ஆரைகள் முறையே 3.2 10^4 m, 6.4×10^3m ஆகும். இரு கோள்களிலும் தப்பு வேகங்கள் சமனாக இருப்பின் அவற்றின் திணிவுகளுக்கிடையிலான விகிதம்

1.4 2.5 3.10 4.64 5.32

41. 4 சமனான ஒவ்வொன்றும் $+2\ \mu C$ ஏற்றங்களைக் கொண்ட துணிக்கைகள் வட்டம் ஒன்றின் பரிதியில் படத்தில் காட்டியவாறு வைக்கப்பட்டுள்ளது.

ABயில் உள்ள விசையின் திசை Bயில் இருந்து D ஐ நோக்கிய திசையில் இருக்கும்.

Bநேர் ஏற்றம் ஒன்று Dயில் இருந்து Cயிற்கு கொண்டு செல்ல செய்யப்பட்ட வேலையின் நேர் தன்மை கூடும்.

C வட்டத்தின் மையத்தில் மின் அழுத்தம் நேர் பெறுமானத்தையும், மின்புலச் செறிவு பூச்சியமாகவும் இருக்கும்.



இக்கூற்றுக்களில்,
1.A,Bமாத்திரம் உண்மையானவை
2.B,Cமோத்திரம் உண்மையானவை
3.A,Cமோத்திரம் உண்மையானவை
4.Cமோத்திரம் உண்மையானது
5.A,B,Cஎல்லாம் உண்மையானவை

42.காட்டப்பட்ட சுற்றில் கலங்கள் A, B என்பவற்றின் மின்னியக்க விசைகள் முறையே 8V உம், 4 V உம் ஆகும். அவற்றின் அகத்தடைகள் புறக்கணிககத்தக்கவை. கல்வனோமானி G யின் திரும்பல் பூச்சியமாகும் ஆயின் தடை X இன் பெறுமானம்



1.800 Ω 2.400 Ω 3.200 Ω
4.100 Ω 5.0 Ω

43.தரப்பட்ட மின் சுற்றில் கல்வனோமானியின் திரும்பல் பூச்சியமாகும் ஆயன் பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A) 2E மின்னியக்க விசையுடைய வேறு ஒரு கலமானது கலம் Aயிற்காக பிரதியீடு செய்யப்படும் போது கல்வனோமானியின் திரும்பலில் மாற்றம் இல்லை.

B)P,S என்னும் தடைகளின் பெருக்கமானது Q,R என்னும் தடைகளின் பெருக்கத்திற்கு சமனாகும்.

C)கலமும் கல்வனோமானியும் தமக்குள் மாற்றப்படும் போது கல்வனோமானியின் திரும்பல் மாறும்



1.Bமாத்திரம் உண்மையானது
2.A,Cமோத்திரம் உண்மையானது
3.A,Bமாத்திரம் உண்மையானது
4.B,Cமோத்திரம் உண்மையானது
5.A,B,Cஎல்லாம் உண்மையானது

44.ஒரு கண்ணாடி அரியத்தின் மீது படுகின்ற ஒரு நிற ஒளிக்கதிர் ஒன்று உருவில் காணப்படுகின்றது. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A.கோணம் i_2 ஆனது எப்போதும் கோணம் i_1 உடன் குறைவடையும்

B.படுகோணம் i_1 ஆனது பூச்சியமாக இருக்கும் போது முகம் A Bயில் ஒளிக்கதிர் முறிவுக்கு உள்ளாகும்.

C.இழிவு விலகலின் போது $r_1 = r_2 = A$ ஆக இருக்கும். மேலுள்ள கூற்றுக்களில்,



1.Aமாத்திரமே உண்மையானது 2.Bமாத்திரமே உண்மையானது
3.Cமோத்திரம் உண்மையானது
4.A,யும் Bயும் மாத்திரம் உண்மையானது
5.A,B,C ஆகியன எல்லாம் உண்மையானவை.

45.ஒளிக்கதிர் ஒன்று அரியம் ஒன்றின் முகம் ஒன்றின் மீது செவ்வனாக்கப்பட்டு உருவில் காட்டப்பட்டவாறு முழு அகத்தெறிப்பு அடைகிறது அரியத்திரவியத்தின் முறிவுச்சுட்டி n ஆயின்.

1) $n=\frac{1}{2}$ 2) $n=\frac{\sqrt{3}}{2}$ 3) $2n$
4) $n>\frac{1}{2}$ 5) $n>\frac{\sqrt{3}}{2}$



46.பின்வரும் கதிர் வரிப்படங்களில் எந்த ஒன்று பிழையானது இங்கு O ஒளியியல் மையமாகும்.



47.கண்ணினுள் விம்பத்தூரத்தை மாறாது பேணுவதற்கு பயன்படுவது,
1.விழித்திரை 2.பிசிர்த்தசை நார்கள் 3.கண்மணி
4.வழிவெண்படலம் 4.பார்வை நரம்புகள்

48.வானியல் தொலைக்காட்டியையும் கூட்டுநுணுக்குக் காட்டியையும் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A)இரு கருவிகளும் பார்வைக் கோணத்தை அதிகரிக்கின்ற கருவிகளாகும்

B)இரு கருவிகளும் இயல்பான செப்பம் செய்கை நிலையில் உள்ளபோது உருப்பெருக்கவலு உயர்வானது.

C)இரு கருவிகளும் முடிவிலிச் செப்பம் செய்கையில் உள்ளபோது கண்ணானது தன்மைவுறா நிலையில் இருக்கும்.

இக்கூற்றுக்களில்,
1.Aமாத்திரம் உண்மையானது
2.Bமாத்திரம் உண்மையானது
3.Cமோத்திரம் உண்மையானது
4.A,Cஆகியன உண்மையானவை
5.A,B,C ஆகிய எல்லாம் உண்மையானவை

49. காட்டப்பட்ட மின்சுற்றானது Rதடையுடைய A,B,C,D என்னும் மின் குமிழ்களைக் கொண்டது. கலத்தின் மின்னியக்கவிசை E ஆகும்.



A)Aயானது பழுதடையுமாயின் பழுதடைய முன்னரும் பின்னரும் Bயினூடாக மின்னோட்டங்கள் முறையே $\frac{E}{4R}$ உம் $\frac{E}{3R}$ உம் ஆகும்.

B)Dயினூடான மின்னோட்டம் $\frac{3E}{4R}$ ஆகும்

C)A யானது பழுதடையும் போது Cயின் ஒளிச்செறிவு அதிகரிக்கும் Dயின் ஒளிச்செறிவு குறைவடையும்.

இக் கூற்றுக்களில்,
1.Aமாத்திரம் சரியானது
2.Aயும் Cயும் மாத்திரம் சரியானவை
3.Aயும் B யும் மாத்திரம் சரியானவை
4.Bயும் Cயும் மாத்திரம் சரியானவை
5.A,B,C ஆகிய எல்லாம் சரியானவை

50. காட்டப்பட்ட வலைவேலையில் A ,B யிற்கிடையிலான சமவலுத் தடை,

1) 6 Ω 2) 1 Ω 3) 12 Ω
4) 5 Ω 5) 36 Ω



51.



கலம் P யின் முனைகளுக்கு குறுக்கேயான அழுத்தவேறுபாடு பூச்சியமாக இருப்பின் R இன் பெறுமதி

1) $r_2 - r_1$ 2) $\frac{2}{3}(r_2 - r_1)$ 3) $r_1 - r_2$
4) $r_1 + r_2$ 5) $\frac{2}{3}(r_1 - 1)$

52.இயல்பான செப்பம் செய்கையிலுள்ள வானியல் தொலைக்காட்டி ஒன்றினால் நட்சத்திரம் ஒன்று நோக்கப்படுகின்றது. இதன் போது இறுதிவிம்பம் கண்ணின் மீது எதிர்மைக்கும் கோணம் 7.5^0 இந் நட்சத்திரம் வெற்றுக் கண்ணின் மீது கோணம் 0.5^0 ஐ எதிரமைக்கின்றது. கண்வில்லையின் குவியத் தூரம் 60 mm ஆயின் தொலைக்காட்டியின் நீளம்,
1.750 mm 2.840 mm 3.900 mm 4.960 mm 5. தரவுபோதாது

53.அலைகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A.)அலையுடன் ஊடகம் முழுமையாக இயங்கும்
B)நிலையான வேகத்துடனான அலையொன்றுக்கு அதிர்வெண்ணானது அலை நீளத்துடன் குறைவடையும்.
C)அலைகள் எல்லாவற்றையும் குறுக்கலைகள்,நெட்டாங்கு அலைகள் என இரு பெரும் பிரிவுகளுள் அடக்கலாம்.
இக் கூற்றுக்களில்,
1.A மாத்திரம் உண்மையானது 2.B மாத்திரம் உண்மையானது
3.C மாத்திரம் உண்மையானது 2.B,C ஆகியன உண்மையானவை
5.A,B,Cஆகிய எல்லாம் உண்மையானவை

54.காட்டப்பட்ட சுற்றிலுள்ள கொள்ளளவியின் தட்டுக்களுக்கிடையிலான வேறாக்கம் 2mm உம், கொள்ளளவம் 2 μF உம் ஆகும் கலத்தின் அகத்தடை பூச்சியமாகும் எனின் தட்டுக்களுக்கிடையிலான மின்புலச் செறிவு,



1) $5\times10^3\ V m^{-1}$ 2) $500\ V m^{-1}$ 3) $10\times10^3\ V m^{-1}$
4) $15\times10^3\ V m^{-1}$ 5) $20\times10^3\ V m^{-1}$

55.காட்டப்பட்ட மின்சுற்றில் கலத்தின் அகத்தடை பூச்சியமாகவும் வோல்ற்று மானி இலட்சியமானதாகவும் இருப்பின் வோல்ற்று மானியின் வாசிப்பு
1.8 V 2.12 V 3.6 V 4.5 V 5. 0V



56.



காட்டப்பட்ட மின்சுற்றில் P,Q என்னும் முனைகளுக்கிடையிலான அழுத்த வேறுபாடு,

1.O 2. E 3.2E 4.3E 5.4E

57 நானகு தடைகளைக் கொண்டு E மின்னியக்க விசையும் R அகத்தடையும் உடைய கலததிற்கு மூன்று வித்தியாசமான மின் சுற்றுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுற்றினூடாகவும் வரிப்படத்தில் காட்டியவாறு கலத்திலிருந்து எடுக்கப்படும் மின்னோட்டங்கள் முறையே $I_1.I_2.I_3$ ஆகும்.



பின்வரும் கூற்றுக்களில் சரியானது,
1.I_1 ஆனது I_2 விற்கு சமனாகவும் I_3யானது உயர்வாகவும் இருக்கும்
2. I_2, I_3 சமனாகவும் , I_1 ஆனது குறைவாகவும் இருக்கும்
3.I_1, I_2, I_3 மூன்றும் சமனாக இருக்கும்
4. I_1, I_2, I_3 மூன்றும் வித்தியாசமாக இருக்கும்
5.I_1, I_3சமனாகவும் I_2 சிறிதாகவும் இருக்கும்

58.காட்டப்பட்ட மின் சுற்று வரிப்படத்தில் கலத்தினூடாக மின்னோட்டம்,
153 A 2. 3 A
3.1 A 4.12 A 5. 4A



59.ஒரு முனைமூடப்பட்ட குழாயில் இரு அடுத்துவரும் பரிவுமீடிறன்கள் 350 Hz இலும் 450Hz இலும் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. எனின் இக் குழாயில் பெறத்தக்க மிகத்தாழ்ந்த மீடிறன்

1.50Hz 2.100Hz 3.200Hz 4.300Hz 5.350Hz

60.பொருளொன்றினது பெயர்ச்சி (D) நேரம் வரைபு வரிப்படத்தில் காட்டப்பட்டவாறு அமைந்துள்ளது,
A) t_1 இலும் t_3வேகம் திசைமாறுகிறது.
B) t_1 இலும் t_4இலும் ஆர்முடுகல் திசைமாறுகிறது
C) t_1 இலும் t_3இலும் வேகம் பூச்சியமாகும்
மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள்
1.Aமாத்திரம் உண்மையானது
2.Bமாத்திரம் உண்மையானது
3.Cமாத்திரம் உண்மையானது
4.A,Cமாத்திரம் உண்மையானவை
5.A,B,C எல்லாம் உண்மையானவை



பௌதீகவியல்-11-B physics-11 -B
2மணித்தியாலங்கள் 2 hours

பௌதிகவியல் II-B
பகுதி B கட்டுரை
நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01)i.பேணுயின் சமன்பாட்டை எழுதி குறியீடுகளை வரையறுக்குக. சமன்பாட்டிலுள்ள ஒவ்வொரு உறுப்புக்களையும் வரையறுக்குக.
ii.விதி வலிதாவதற்கான நிபந்தனைகளை கூறுக?
iii.குழாயில் இருந்து விழும் அருவிக்கோட்டுப்பாய்ச்சலில் உள்ள நீர் நிரலின் குறுக்குவெட்டு சீராக குறைகின்றது ஏன் என விளக்குக.
iv.விளையாட்டு நீர் துப்பாக்கி ஒன்றின் உருவமைப்பை உரு காட்டுகின்றது.



அதிலுள்ள முசலத்தின் குறுக்குவெட்டுப்பரப்பு 75 mm^2 உம் வெளியேறும் வாயின் குறுக்கு வெட்டுப்பரப்பு 1 mm^2 உம் ஆகும் கிடையாக சுடப்படும் போது துப்பாக்கியின் வாயிலிருந்து கிடையாக 3.5 m இற்கும் அக்கிடை மட்டத்திலிருந்து நிலைக்குத்தாக கீழ் 1m இற்கும் இடையில் உள்ள வீச்சில் நீர்த்தாரை படுமாறு துப்பாக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறுவன் ஒருவன் 10 N விசையை பிரயோகிக்கும் போது வாயினூடாக வெளியேறும் நீரின் கதியை காண்க.
முசலத்தின் மீது உள்ள உராய்வு விசைகளையும், சக்தி இழப்புக்களையும் புறக்கணிக்க.

v.அவன் பிரயோகிக்கும் விசையானது மேற்கூறப்பட்ட வடிவமைப்புக்கான தேவைகளை திருத்திப்படுத்துமா?
கணிப்புக்களுடன் விளக்குக?
வளிமண்டல அமுக்கம் $1x10^5$ pa நீரின் அடர்த்தி 10^3 kg m^{-3}

02) i.அலை ஒன்று முழு அகத்தெறிப்புக்கு நடைபெறுவதற்குரிய நிபந்தனைகளை கூறுக?
ii.ஒளி அலை ஒன்று அரியமொன்றின் ஒரு முகத்தில் பட்டு இரு முறிவுகளுக்கு உட்பட்டு இரண்டாம் முகத்தில் இருந்து வெளியேகின்றது. படுகோணம் i_1 வெளிப்படுகோணம் i_2 அரியக்கோணம் A_1 விலகல் கோணம் d என்பவற்றை அரியமொன்றில் கதிர்வரிப்படம் வரைந்து குறிக்குக.?

iii.மாணவன் ஒருவன் அரியக்கோணத்தை துணிவதற்கான பரிசோதனை ஒன்றில் வெவ்வேறு படுகோணங்கள் i_1ஒன்றிறகு ஒத்த i_2d சோடி வாசிப்புக்கள் பெறப்பட்டடு ஏகபரிமான வரை பெண்றை வரைய திட்டமிடுகிறான் இவ்வரைபை வரைவதற்கு ஏற்ற சாரா மாறியையும், சார் மாறியையும் கூறுக? அத்துடன் வரையிலிருந்து எவ்வாறு அரியக்கோணத்தை காண்பீர் என்பதையும் விளக்குக.

iv.கணணாடிக்குற்றி ஒன்றினுள் சமபக்க முக்கோணி அரிய வடிவிலுள்ள வளி வெளி ஒன்று உள்ளது. கண்ணாடியின் முறிவுச்சுட்டி 1.5 ஆகும் அரியததின் ஒரு முகத்தில் படும் ஒளிக்கதிரொன்று எதிர்முகத்திலிருந்து வெளியேறுகின்றது.
a.ஒளிக்கதிரின் பாதையை வரைக
b.கதிரில் ஏற்படும் மொத்த விலகலுக்கான கோவை ஒன்றை படுகோணம் i_1 வெளிப்படுகோணம் i_2 முறிகோணங்கள் r_1 r_2சார்பில் பெறுக.
c.அரியத்தின் படுகோணம் 40^0 ஆயின் மொத்த விலகல் கோணத்தை காண்க?
d.அரியத்தின் இழிவு விலகல் நிலைக்குரிய படுகோணத்தைக் காண்க?

03.நிலைத்த திணிவு m ஐ உடைய வாயு ஒன்றின் அமுக்கம், கனவளவு, வெப்பநிலை என்பவை முறையே P,V,T ஆகும்.
பின்வரும் வரைபுகளை வரைக.
i.வெப்ப நிலை மாறாதிருக்கும் போது , P எதிர் V வரைபு.
ii.வெப்ப நிலை மாறாதிருக்கும் போது, Pஎதிர் $1/V$ வரைபு.
iii.அழுக்கம் மாறாதிருக்கும் போது, V எதிர் T வரைபு

b)பொயிலின் விதியையும் சாள்சின் விதியையும் கூறி இவ் விதிகளைப் பயன்படுத்தி P,V,T என்பவற்றுக்கிடையிலான தொடர்பை பெறுக.

c)இரசப்பாரமானியின் கண்ணாடிக்குழாயில் இரசத்திற்கு மேல் சிறிதளவு வளி கொள்ளப்பட்டுள்ளது. அறை வெப்பநிலைகள் $7^0C,27^0C$ ஆகிய இரு வேறுபட்ட நாட்களில் இரச நிரல்களின் உயரங்கள் முறையே 60 cm உம் 58 cmஉம் ஆகும். இவ்விரு நாட்களிலும் முறையே வளிநிரல்களின் நீளங்கள் முறையே 28cm,30cmஉம் ஆகும்.இவ்விரு நாட்களில் வளிமண்டலம் அமுக்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தை கணிக்குக.

d)பலூன் ஒன்று 27^0C யில் ஐதரசன் வாயுவினால் நிரப்பப்பட்டுள்ளது. அவ்வாயுவின் அடர்த்தி 0.09.kgm^{-3} ஆகவும் வாயு மூலக்கூறுகளின் வர்க்க இடைமூலவேகம் $2x10^3$ ms^{-1} ஆகவும் உள்ளது. பின்வருவனவற்றை கணிக்குக.

i.பாலுனினுள் உள்ள வாயுவின் அமுக்கம்
ii.பலூனின் கனவளவு 0.02m^3 ஆயின் அடைக்கப்பட்ட வாயுவின் திணிவு
iii பலூன் உறையின் திணிவு 0.1kg ஆயின் விடுவிக்கப்பட்டவுடன் அதன் ஆரம்ப ஆர்முடுகல
iv. பலூன் 7^0C வெப்ப நிலையிலுள்ள பகுதியை அடையும் போது பலூனினுள் உள்ள வாயுவின் வர்க்க இடைமூல வேகத்தையும், அவ்வாயுவின் இயக்க சக்தியையும் கணிக்குக.
(வாயுமாறிலி $R = 8.3\ J\ mol^{-1} K^{-1}$,வளியின் அடர்த்தி = 1.2 kgm^{-3}
அவகாதரேவின் எண் = $6x10^{23}$,இரசத்தின் அடர்த்தி = 13600 kgm^{-3}

(தொடரும்)

வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

கறிவேப்பிலை

Botanical Name -Murraya Koenigii
Family - Rutaceae
Engl - Curry - Leaf
Sing - Karapincha

இதன் இலையை எல்லோரும் நன்கறிவார்கள். இந்த மரம் சிறிது படர்ந்தாற் போல் சுமார் 20-25 அடி உயரம் வரைக்கும் வளரும். மரம், கிளை, குச்சிகள் யாவும் கருமை நிறமுடையன. கனமும், அழுத்தமுமுள்ள இலைகள் நீண்டு சுமார் 2-6 செ.மீ நீளமும், 1-2 செ.மீ அகலமும் உள்ளதாய் இருக் கும். காம்பின் இருமருங்கிலும் சுமார் 10 முதல் 20 வரைக்கும் இலைகள் வரிசையாக எதிர் எதிராக அழகாக அமைந்திருக்கும். வைகாசி மாதங்களில் கொத்து கொத்தாக பூக்கும். சிறிய பூக்கள் வெண்மையானவை. பழங்கள் மிளகை விட கொஞ்சம் பெரியன, காய் பச்சையாகவும், பழம் கருமையாகவும் இருக்கும். பழத்தில் 2 விதைகள் உண்டு. இம்மரம் பல ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

பரம்பலும், இனவிருத்தியும்

ஆண்டு முழுவதும் பயிரிடலாம். கரிசல் மண்ணில் அதிகமாக பயிரிடலாம். மண்ணை நன்றாக கொத்திக் கிளறித் தூளாக்கிக் கொண்டு விதைகளைப் பலகை கொண்டுதேய்த்து இரண்டாக உடைத்து ஒருநாள் நீரில் ஊறவைத்த பின்னர் விதைக்கவும். விதைத்த பின்னர் மணலை மேலே கொஞ்சமாகத் தூவவும். அதன் மேல் வைக்கோலை கொஞ்சமாகப் போட்டு மூட வேண்டும். தவறாது தினமும் இரண்டு வேளையும் நீரைத் தெளித்து வரவேண்டும். 3, 4 தினங்களில் முளை கண்டவுடன் வைக்கோலை நீக்கி விட வேண்டும். 2 இலிருந்து 7 வாரங்கள் வரை இலைகளை மட்டும் பறித்து உபயோகிக்கலாம். 3 ஆம் மாதம் பூத்துக் காய்க்கும்.

100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்

புரதம் 6.1 கிராம், கொழுப்பு 1.0 கிராம், காபோவைதரேற்று 18.7 கிராம், கல்சியம் 830 மில்லி கிராம், பொசுபரசு 57 மில்லிகிராம், இரும்பு 7.0 மில்லிகிராம், உயிர்ச்சத்து ‘C’4.0 மில்லிகிராம், கரோட்டின் 7560 மைக்ரோகிராம், தயமின் 80 மைகிரோகிராம், ரைபோபிளே வின் 120 மைக்கிரோகிராம்.

மருத்துவப் பயன்கள்

◆ கறிவேப்பிலைக் கீரையை நிழலில் உலர்த்தி அத்துடன் மிளகு, உப்பு, சீரகம், சுக்கு சேர்த்து பொடியாக்கிச் சோற்றுடன் சேர்த்து கொஞ்சம் நெய் பிசறி உண்ண பசியின்மை, வயிற்றுப் பொருமல், மலக்கட்டு, சமிபாடின்மை, வயிற்றில் மந்தம் முதலியன குணமாகும்.

◆ கறிவேப்பிலைக் கீரையுடன் சுட்ட புளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் ஆகியவைகளைச் சேர்த்து துவையல் செய்து உணவுடன் உள்ளெடுக்க உருசியின்மை, பித்த வாந்தி, வயிற்றோட்டம் குணமாகும்.

◆ இஞ்சி, கொத்தமல்லி, கறிவேப்பிலை இம்மூன்றையும் ஜீரண உறுப்புக்களின் நண்பன் எனக் கூறலாம். உதாரணமாக கறிவேப்பிலை 3 கிராம், தோல் நீக்கிய இஞ்சி 3 கிராம் இரண்டையும் நன்றாக அரைத்து 1 லீற்றர் மோரில் கலக்கி சாப்பிட பசி அதிகரிக்கும். பலவீனம் குறையும். ஈர்ப்புத் தன்மை (Concentration) அதிகரிக்கும்.

◆ கறிவேப்பிலைகளை உலர்த்தி பொடித்து சலித்து வெண்ணெயுடன் கலந்து காலை, மாலை சாப்பாட்டின் முன் உட்கொள்ள சுவை நரம்புகள் தூண்டப்பட்டு பசி அதிகரிக்கும். உணவில் நாட்டம் அதிகரிக்கும். உணவு சரியான முறையில் உடலில் சேர்த்துக் கொள்ள வழி வகுக்கும்.

“கறிவேப்பிலையே வேப்பிலை காய்கறிக் கெல்லாம் தாய்ப்பிள்ளை”

எனும் பழமொழி கறிவேப்பிலை மரமும் நன்றாக உழைக்கும் வலுப் பெற்றது. அதாவது உழவுக் கருவிகள் செய்ய இம்மரத்தை பயன்படுத்துகிறார்கள். அதாவது முன்னைய காலங்களில் விவசாயத்தில் கூட இயற்கை முறைகள் பயன்படுத்தி வந்தமையை விள ம்பி நிற்கிறது.

◆ கறிவேப்பிலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி, பொடித்து, அரித்து 1-2 கிராம் அளவு வெந்நீருடன் காலை, மாலை உட்கொள்ள நீரிழிவு கட்டுப்படும். நீரிழிவு நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

◆ கறிவேப்பிலை, வெள்ளைக் கரிசாலை, மருதோன்றி இலை இவைகளை ஓரளவாக (சமஎடையாக) எடுத்து நன்றாக நிழலில் உலர்த்தி, தனித்தனி பொடித்து, பின்பு மூன்றையும் ஒன்றாக கலந்து இடித்து, சலித்து, போத்தலில் சேகரித்து வைத்துக் கொண்டு இளநரையுள்ளவர்கள், செம்பட்டை மயிர் உள்ளவர்கள் செயற்கை சாயப் பொடிக்கு பதிலாக (Artifiscial Dye Powder) இயற்கையான சாயப் பொடியாக (Dye Powder) நரை, செம்பட்டைக்கு வெந்நீர் கலந்து (மேற்படி பொடிக்கு) அரை மணிநேரம் ஊறவைத்து பின் தலைமயிருக்கு நன்றாக பூசி 1 மணிநேரம் கழித்து தலை மூழ்கி வர இளநரை, செம்பட்டை முற்றாக நீங்கும்.

குழந்தை பெற்ற தாய்மார்களுக்கும், மற்றும் ஜீரண சக்தியை அதிகரிப்பதற்கு உகந்த, கறிவேப்பிலைக் குழம்பு

துவரம்பருப்பு - 2 மேசைக்கரண்டி, உளுத்தம் பருப்பு - 1 மேசைக்கரண்டி, மிளகு - 1 மேசைக்கரண்டி, மிளகாய் வற்றல் - 2, பெருங்காயம் - 1துண்டு, புளி - தேவையானளவு, சுண்டைக்காய் வற்றல் - 10 அல்லது 15, கறிவேப்பிலை - 1 கிண்ணம் (உருவியது), உப்பு - தேவையானளவு, நல்லெண்ணெய் - தேவையானளவு.

செய்முறை :- வாணலியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு அதனுள் மிளகு, மிளகாய் வற்றல், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், இவற்றைப் போட்டு, சிவக்க வறுத்துக் கொண்டு அதிலேயே கறி வேப்பிலையைப் போட்டு வதக்கி, அடுப்பை அணைத்து விடவும். சற்று ஆறியபின் புளி, உப்பு, வறுத்த பொருட்கள் இவையனைத்தையும் சிறிது தண்ணீர் விட்டு கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். பின்பு மீண்டும் வாணலியிச் தேவையானளவு நல்லெண்ணெயை விட்டு கடுகை வெடிக்க விட்டு பிறகு அரைத்த விழுதைப் போட்டு 200 மில்லி தண்ணீர் விட்டு மஞ்சள் தூளும் கொஞ்சம் சேர்த்துக் கொதிக்க விடவும். குழம்பு கெட்டியான பிறகு சுண்டைக்காய் வற்றலை சிறிதளவு நல்லெண்ணெயில் வறுத்துப் போடவும். மேற்படி குழம்பில் 1 மேசைக்கரண்டி அளவு சூடான சோற்றில் பிசைந்து சாப்பிட ஜீரண் உறுப்புக்களை வலுப்படுத்துவதோடு துவரம்பருப்பு, உழுத்தம் பருப்பு போன்றவை உடலுக்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

◆ முகத்தில் ஏற்படும் அம்மை வடு மாற, கறிவேப்பிலை ஒரு கைப்பிடியளவு, கசகசா 15 கிராம், கஸ்தூரி மஞ்சள் 8 கிராம் இவைகளை அம்மியில் வைத்து மைபோல அரைத்து முகத்தில் கனமாகப் பூசி 15 நிமிடங்கள் ஊறவைத்த பிறகு வெந்நீர் கொண்டு கழுவி விட வேண்டும்.

பாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

இவ்விதம் காலை, மாலை செய்து வந்தால் அம்மை வடு படிப்படியாக மறையும்.

கறிவேப்பிலையை மைபோல அரைத்து கொட்டைப் பாக்களவு காலை, மாலை பாலுடன் அருந்தி வர தலைமயிர் உதிர்தல் நின்று, தலைமயிர் நன்கு வளரும்.

எனவே கறிவேப்பிலையை வெறும் வாசனைப் பொருளாக மட்டும் உணவில் சேர்க்காமல் பல நோய்களுக்கும் சிறந்த மூலிகையாகப் பயன்படுத்தி பலன் பெறவும்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் நிர்மாணப்பணிகள் 2013 இல் நிறைவுபெறும்

2ஆம், 3ஆம் கட்டப் பணிகளுக்கான ஒப்பந்தமும் கைச்சாத்து

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இரண்டாம், மூன்றாம் கட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம், சீன அரசாங்கத்திற்கும் இலங்கைக்கும் இடையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

இந்த அனல்மின் நிலையத்தின் ஊடக 900 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்என்றும் முதலாம் கட்டத்தில் 300 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விட்டது என்றும் மீதமுள்ள 600 மெகா வோட் மின்சாரமும் நிர்மாணப் பணிகளும் 2013 ஆம் ஆண்டள வில் நிறைவு பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மஹிந்த சிந்தனை கொள்கையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்திற்கு சீன அரசாங்கம் உதவி வருகின்றது.

முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்து விட்டதுடன் ஏனைய இரு திட்டங்களும் 2013 ஆம் ஆண்டு நிறைவடையும். இதற்கென 891 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப் படவுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்படி நுரைச்சோலை அனல்மின் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் 2010 ஆம் திகதி நிறைவடையும். இதுவரை யிலும் 60 வீத பணிகள் நிறைவ டைந்து விட்டன.

இலங்கைக்கு மிகவும் பொருத்தமான இந்த முறைக்கு 891 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப் படவிருப்பதாகவும், 2013 ஆம் ஆண்டு பணிகள் நிறைவடையும் இரண்டாம், மூன்றாம் கட்டப் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் மின்சார சபைத் தலைவர் எஸ்.கே. எதிரிசிங்க சீன தேசிய பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஜெய் சியாகுயாங் ஆகியோர் கைச்சாத்திட்டனர். (ஓ-4)

மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

ஒன்பதாம் நாள் திருவிழா

நவ நாளின்று பக்தனுக்கு வரம் தருவாய்!

நம்பிக்கை தந்தாய் நாளும்
நலம் பெறவைத்தாய் என்றும்
நாடியோன் வினைகள் தீர்த்தாய்
நாடோடி எமக்கு நல்வாழ்வு தருவாய்
நயினையிலே வீற்றிருக்கும் நம் தாயே!
நாளும் உன் பாதம் தொழ வேண்டும்
நாம் நல்வாழ்வு வாழ வேண்டும்
நயினை நாக பூஷணியே! தாயே! வரம் தருவாய்.

கு. யசிதீபன்
அரியாலை.

நம் இனம் நலம்பெற தொழுவோம்

வார் அணி, முடி, சடையினாளை
வளர் முலை தாங்கா நூல் இடையினாளை
பூரண நிலவொளி பொன் முகத்தினாளை
புன்னகை இலங்கு செவ்விதழினாளை
நீரலை மருவும் நயினை தன்னில்
நிழலென அருள் மழை சொரியும் எங்கள்
நாரணி நல் நாக பூஷணியாளை
நம் இனம் நலம் பெற தொழுவோம் யாமே

பொன் அரசு
நயினை - 04

அமுத சொரூபினி அம்பாளே

கடல் அன்னை தாலாட்ட
கருணையே வடிவான நயினை
நாகபூஷணித் தாயே
அடியார்கள் பசி போக்கும்
அமுத சொரூபினி அம்பாளே
கரம் குவித்தோம் – எம்
அவலங்கள் தனைப் போக்கி
அருளாட்சி புரிந்திடம்மா

இரா. தர்மரட்ணம்
நெடுந்தீவு - 12

தடுத்தாட் கொள்வாய்

அலைகடல் ஓரம் அமர்ந்த எம்தாயே
ஆறுதல் தருவாய் அன்ன பூரணியே
நிலையற்ற வாழ்வில் நீண்டதே பயணம்
நிம்மதி இழந்து சரண் அடைந்தோமே
மலையினில் பிறந்த மாதவச் செல்வியே
மணி பல்லவம் அமர்ந்து ஆளும் அரசியே
தலைமுறை யாவும் சிறையினில் வாடுதே
தடுத்தாட் கொள்வாய் நாக பூஷணியே

வட.அல்வை சின்னராஜா

உலகினில் அமைதியைத் தாருமம்மா

அகிலம் போற்றும் நயினையிலே
அன்னையாய் அமர்ந்தெமை ஆள்பவளே
உன்னை நம்பியே வாழுகின்றோம் } 2
உலகினில் அமைதியைத் தாருமம்மா

செம்பாம்புடனே கரும்பாம்பு
செவ்வாய் வெள்ளியில் பெரும் நோன்பு
அம்மா உனது அடியாரின் } 2
ஆராதனைகளோ பல நூறு

கொல்லும் பிணிகள் ஒரு புறமும்
குதறும் உறவுகள் மறு புறமும்
அல்லும் பகலும் அவலங்கள் } 2
அனைத்திலு மிருந்தெமைக் காத்திடம்மா

கவிமணி அன்னைதாஸன்
உரும்பிராய்.

வாழ்க்கை சிலருக்கு நாடகமாகத் தோன்றுகிறது.
நாடகம் சிலருக்கு வாழ்க்கையாகத் தோன்றுகிறது.
- ஓர் அறிஞர்

வலம்புரி

முகாம் மாணவர்களுக்கு உதவ முன் வாருங்கள் மாணவச் சோதரரே!

என் அருமை மாணவர்களே !

நீண்ட நாட்களாய் உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்ற நினைப்பு.

இருந்தும் பல்வகை சுமைகள். அதனால் சர்வகட்சிக் குழுபோல் ஒத்திவைப்பு. தொடர்ந்தும் ஒத்திவைக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

அது என் நெஞ்சுக்கு நீதியாகவும் தெரியவில்லை. என்ன அப்படியென்று நீங்கள் அறியத் துடிக்கலாம்.

எல்லாம் முகாமிலிருக்கும் எங்கள் -உங்கள் உறவுகள் பற்றியதுதான்.

அன்பு மாணவர்களே!

உங்கள் சக மாணவர்கள் பல முகாமில் ஏங்கிய விழிகளுடன் -எதிர்காலத்தைத் தொலைத்த சோகத்துடன் இருக்கின்றனர். உயிரைத் தவிர வேறு எதனையுமே எடுத்துவரவில்லை என்ற சோகம் வார்த்தையாய் வந்தபோது, கூடவே அந்த மாணவர்களின் கன்னங்களும் நனைந்து கொண்டன.

க.பொ.த. உயர்தரத்தில், சாதாரணதரத்தில் தோற்ற இருக்கும் நாம் எந்த பாடக் கொப்பிகளையும் கொண்டுவரவில்லை. எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்ற வேதனை அவர்களை வாட்டுகிறது, வதைக்கிறது.

பாடக்குறிப்புகள் இல்லாமல் எப்படித் தங்கள் படிப்பை மேற்கொள்வதென்ற கேள்வி எந்நாளும் அவர்களை உறங்கவிடுவதில்லை.

இப்பெருந் துயரத்தில் மூழ்கியுள்ள எங்கள் சக மாணவர்களின் மனக்கவலை நீக்க உங்களைத் தவிர வேறு யாரால் முடியும். நீங்கள் நினைத்தால் எல்லாம் நன்றாக நடக்கும்.

ஆம்! நீங்கள் கற்கும்போது எடுத்துக்கொள்கின்ற குறிப்புகளை பிரதி செய்து முகாமிலுள்ள பொருத்தமான மாணவர்களிடம் ஒப்படையுங்கள்.

உங்களின் கற்றல் நிறைவடையும்போது முகாமிலுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடும் நிறைவடையும்.

உங்களிடம் இருக்கும் அதே குறிப்புகள், வினாத்தாள்கள், பயிற்சிகள் அத்தனையும் அவர்களிடமும் இருக்கும். பரீட்சையில் அவர்களும் நீங்களும் எண்ணிய இலக்கை அடைந்து கொள்வீர்கள்.

போர் நடந்த மண்ணிலிருந்து மீண்ட மாணவர் படிப்பில் படைத்த சாதனைக்கு நீங்கள் உதவினீர்கள் என்ற உன்னத நிறைவு மகத்தானது. அது மனித வாழ்வின் இலக்கை அடைய வைக்கும்.

அந்த பணியை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு...

இன்னுமொன்று உயர் தரத்தில், சாதாரண தரத்தில் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தங்கள் கற்றல் உடைமைகளை உவகையோடு முகாமிலிருக்கும் மாணவச் செல்வங்களுக்கு வழங்கலாம் அல்லவா?

மாணவர்களே செய்வீர்களா?

ஐ.தே.க. செய்த போர் நிறுத்த உடன்படிக்கையே போரின் வெற்றிக்குக் காரணம்

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் பெருமிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட போர் நிறுத்த உடன்படிக்கையே அரசாங்கம் இன்று போரில் வெற்றிபெறுவதற்கு காரணமாக இருந்துள்ளது என தெரிவித்துள்ள இலங்கைப்பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இந்த உடன்படிக்கை இலங்கையின் வரலாற்றில் மிகவும் முக்கியமானது எனவும் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஐக்கிய தேசியக்கட்சியும் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் இந்த ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றது.

போருக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு போர்நிறுத்த உடன்படிக்கை சாதகமாக அமைந்தது எனத் தெரிவித்த அவர் பட்டாசுகளைக்கொளுத்துவதற்காகவும் கொண்டாட்டங்களை மேற்கொள்வதற்காகவும் தமது கட்சி அரசியல் செய்ய வில்லை எனத் தெரிவித்தார்.போர் நிறுத்த உடன்படிக்கையைச் செய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட சூட்சுமமான நடவடிக்கைகளையிட்டு விடுதலைப்புலிகள் அமைப்புக்கூட குறிப்பிட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையை செய்துகொண்டமைக்காக ஐக்கிய தேசியக்கட்சியை தலைமையை கடுமையாக விமர்சித்துவந்த பலரும் போருக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அதுவே உதவியுள்ளது என்பதை புரிந்துகொண்டுள்ள நிலைமையில் அவ்வாறான விமர்சனங்களை இப்போது தவிர்த்துக்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ஓ-4)

நாட்டில் பொய்யான தீவிரவாத பதற்றத்தை ஏற்படுத்த சில சதிகாரர்கள் முயற்சி

கோத்தபாய குற்றச் சாட்டு

(கொழும்பு)

நாட்டில் பொய்யான தீவிரவாத பதற்றத்தை உண்டு பண்ண சில சதிகாரர்கள் முயற்சி மேற்கொண்டுவருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக இவ்வாறான பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு இலங்கைக்கு செல்லும் சுற்றுலாப்பயணிகளை தடுத்தல் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்வதைத் தடுத்தல் போன்ற சூழ்ச்சிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் யுத்தம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ள நிலையில் வெள்ளைவான் கடத்தல்கள் குறித்து தகவல்கள் வெளியாகி வருவதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட சில ஊடகவியலாளர்களை தொடர்பாக மேற் கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறு கின்றன. அந்த விசாரணைகள் நிறுத்தப்படமாட்டது எனவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

சித்திரம் -கைவேலை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயமும் கடவுளின் குழந்தைகள் நிதியமும் இணைந்து நடத்தும் சித்திரம்-கைவேலை கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் யாழ். கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் த. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். கடவுளின் குழந்தைகள் நிதியத்தின் இயக்குநர் செல்வி ஜெ.அன்ரன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் இக்கண்காட்சியில் கோட்ட மட்ட வலயமட்டம் தெரிவுகள் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

வாகன விபத்தில் பொது மகன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கைதடி வீதியில் நேற்று முன்தினம் படையினரின் தண்ணீர் தாங்கி ஒன்று, மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொது மகன் ஒருவர் பலியானார். தம்பிராசா வேலாயுதபிள்ளை என்பவரே சம்பவத்தில் பலியானவராவார். இவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(ந-5)

நயினை அம்பாளின் திருமஞ்சத்திருவிழா

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 10ஆம் நாள் திருமஞ்சத் திருவிழாவான நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு மூல மூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேக மும் அதனைத் தொடர்ந்து எழுந்தருளி அம்பாளுக்கு ஸ்நபினா அபிஷேகமும் நடைபெற்று அழகிய கைலாச வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் அலங்கார காட்சி இடம் பெறும்.

இரவு விசேட மேளவாத்தியங்களுடன் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கலைமிளிர் சித்திர திருமஞ்சத்தில் விநாயகப் பெருமான் அம்பாள் வள்ளி தேவ சேனா சமேத முருகப் பெருமான் சகிதம் எழுந்தருளி திருவீதி வலம் வந்து அம்பிகை அடியார்களுக்கு அருள் பாலிக்கின்ற அருட்காட்சி நடைபெறும் .

அத்துடன், நல்லூர் நாதஸ்வர கான விநோதன் எஸ்.பி. பால முருகன் குழுவினரதும் கோண்டாவில் நாதஸ்வர இசைமணி நாகதீபன் குழுவினரதும் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறும். (ஓ)

மத்தியஸ்த சபையின் பணிகள் தலையீடுகளின்றி தொடர வேண்டும் !

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

பொதுமக்கள் மத்தியிலான மத்தியஸ்த சபையின் பணிகள் உன்னதமானவை என்றும் அப்பணிகளை எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி யாழ் வைத்தீஸ்வரா கல்லூரிக்கு விஜயம் செய்த அமைச்சர் அவர்கள் அங்கு கூடியிருந்த யாழ். மத்தியஸ்த சபையின் அங்கத்தவர்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

மத்தியஸ்த சபையானது பொதுமக்களுக்கான வரப்பிரசாதமாக செயற்பட்டு வருகிறது என்றும் நீதிமன்றங்களின் வேலைப்பளுவை மத்தியஸ்த சபைகள் வெகுவாகக் குறைத்துள்ளன என்றும் இலவசமாக பொதுமக்களுக்கு உரிய நீதி வழங்கும் மத்தியஸ்த சபையின் அங்கத்தவர்கள் எவ்வித அழுத்தங்களுக்கோ அல்லது வெளித்தலையீடுகளுக்கோ இடமளிக்காது தமது பணிகளை நேர்மையுடனும் சுதந்திரமாகவும் மேற்கொள்ளவேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார். (ஓ)

சுவாமி விவேகானந்தரின் எங்கும் இறைவனைக் காணலாம்

இந்த சொற் பொழிவு *ஈசாவாஸ்ய உபநிடதம்* பற்றி 1896 அக்டோபர் 27ஆம் திகதி சுவாமி லண்டனில் ஆற்றிய உரையாகும். நாம் எவ்வளவு தான் தடுத்தாலும் நமது வாழ்க்கையில் பெரும் பகுதி தீமை நிறைந்ததாகத்தான் இருக்கும் .நடைமுறையில் இந்தத் தீமை ஏறக்குறைய எல்லையற்றதாக இருக்கிறது. ஆதிகாலம் முதல் இதற்குப் பரிகாரம் காண்பதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால் அதுஎன்னவோ அப்படியே தான் இருக்கிறது. அதிகமாகப் பரிகாரங்களை க் கண்டுபிடிக்கின்ற அளவிற்கு மேன் மேலும் நுட்பமான தீமைகள் நம்மைச் சூழ்கின்றன

இந்தத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காகவே ஒவ்வொரு மதமும் ஒரு கடவுளைப் படைத்துள்ளது. உலகம் எப்படித் தென்படுகிறதோ ; அப்படியே அதை எடுத்துக்கொள்ள வேண்டும். என்று லௌகீக மக்கள் கூறுவது போல் செய்தால் தீமையைத் தவிரவேறு எதுவுமே உலகத்தில் இருக்காது என்று எல்லா மதங்களும் கூறுகின்றன.

அங்கவீனர்களின் வாழ்வில் ஒளியேற்றும் ஜெய்ப்பூர்

JAFFNA JAIPUR CENTRE
DISABILITY REHABILITATION

இன்று அதன் 22 வருட நினைவு நாள்

யுத்தம், நோய், பிறப்பு மற்றும் ஏனைய காரணிகளால் அங்கவீனர்களாகி, வலுவிழுந்து, செயலிழந்து, வாழ்விழந்து நிற்கும் எம் சகோதர உறவுகளை மாற்றுவலுவுடையோராக்கி மண்ணில் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் வகையில் மனித நேய புனர்வாழ்வுப் பணிகளை ஆற்றிவரும் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் 01.07.2009 அன்று தனது பணிவாழ்வுப்

பயணத்தில் 22 வருட நிறைவைப் பூர்த்தி செய்துள்ளது. நடந்து வந்த பாதையில் செய்து முடித்த மனிதாபிமானப் பணிச் செயற்பாடுகள் தொடர்பான தனது மனப்பதி வுகள் சில வற்றை மக்களுடன் பகிர்ந்து கொள்ள இக்கட்டுரை துணைபுரியும் என நம்புகிறோம்.

ஆரம்பித்த நோக்கம்

பல்வேறு காரணங்களால் குறிப்பாக உள்நாட்டுப் போரினால் அவயவங்களை இழந்து பரிதவித்து நின்ற எம்மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு செயற்கை அவயவங்களை தயாரித்துப் பொருத்தி அவர்களுக்கு இயல்பு வாழ்வு அளிக்கும் நோக்குடன் அன்னையர் முன்னணி அயராது உழைத்து 01/07/1987 இல் கொழும்பு நட்புறவு சங்கத்தின் (Colombo Friend in-need-society) கிளை நிறுவனமாக யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று சுதந்திரமான தன்னார்வ சேவை நிறுவனமாக இயங்கி வருகின்றது.

இக்கட்டத்தில் எம் நிறுவன உருவாக்கத்திற்கு காரணமாக இருந்த அன்னையர் முன்னணியின் அங்கத்தவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர்களின் தூர நோக்குடன் கூடிய மகத்தான பணி, இன்று எம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது என்றால் மிகையாகாது.

மேலும் இவ்விடத்தில் எமது நிறுவனம் தனது பணியினை ஆரம்பிப்பதற்கு தேவையான நிதியை வழங்கி எமது நோக்கம் செயல் வடிவம் பெற காரணகர்த்தாவாகிய நோராட் (NORAD) நிறுவனத்தினரையும் நன்றியுடன் நினைவுகூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் இன்று எம் நிலைய முகாமைத்துவ அணியில் முறையே கௌரவத் தலைவராக, கௌரவ பொருளாளராக பணியாற்றும் வைத்திய கலாநிதிகள் திருமதி ஜே. கணேசமூர்த்தி, திருமதி. செ. தெய்வேந்திரன் ஆகியோர் இந்நிலைய ஸ்தாபக அங்கத்தவர்கள் (Founder members) என்பதையும் பெருமையுடன் இங்கு கூற விரும்புகின்றோம்.

1987-1999 வரையிலான காலப்பகுதியில் எம் நிலையம் பல்வேறு நெருக்கடிகளுக்கு, இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது. எனினும், நிறுவனத்தின் முகாமைத்துவ அணியினரின் அயராத, தளராத முயற்சியினால் பல கஷ்டங்கள் மத்தியிலும் நிறுவனத்தின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

1999 ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது எமது நிறுவனத்திற்கு ஆதரவு வழங்க முன் வந்தது. பொலிபுறொபைலின் (Polyprophlene) எனும் நவீன தொழில்நுட்பத்தில் அவயவங்களை தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்தி வைத்தது. இச் செயற்பாடானது எமது நிறுவன வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாக கொள்ள வேண்டிய

சிகிச்சையின் முன்னரும்... சிகிச்சைக்குப் பின்னரும்...

நிகழ்வாகும். இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்கை அவயவங்களை தயாரிக்க வேண்டிய இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்கி வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியும் வளர்ச்சியும்

ஆரம்பத்தில் குறைந்தளவு மூலப் பொருட்களுடன் அலுமினியத்தாலான செயற்கை அவயவம் தயாரித்துப் பொருத்தும் பணியுடன் ஆரம்பித்த எமது நிறுவனம் இன்று நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தரமான செயற்கை அவயவங்களையும் (செயற்கைக் கால், செயற்கைக் கைகள்) குறைப்பாட்டு நிவர்த்தி சாதனங்களான கழுத்துப் பட்டி, முள்ளந்தண்டு, ஆதார உறுப்பு, கலிப்பஸ் (Calipers) விசேட காலணிகள் போன்றவற்றையும் பொருத்தி வருகின்றது.

ஆரம்ப காலத்தைப் போலல்லாது, மேற்கூறியவற்றுக்குத் தேவையான சில உதிரிப் பாகங்களை இன்று எமது நிறுவனமே தயாரிப்பது எமது வளர்ச்சிப் படியின் முக்கிய அம்சமாகும். மேலும் மாற்றுவலு உடையோருக்கான ஊன்று கோல்கள், நடை உதவு கருவிகள், நடை தாங்கிகள், முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் போன்ற நடமாட உதவும் உபகரணங்களை, சிறந்த நவீன தொழினுட்ப உத்திகளைக் கையாண்டு மாற்றுவலுவுடையோரின் நோய், உடல் நிலை, சரியான அளவு என்பவற்றுக்கு ஏற்றவாறு தயாரித்து வழங்கி வருகின்றது. அது மட்டுமன்றி, எமது இயன் மருத்துவப் பகுதியில் (Physiotherapy Section) பாரிசவாதம், மூளை முடக்குவாதம், பிறப்புவாசித் தாக்கங்கள், அவயவ இழப்பு போன்றவற்றால் பாதிப்புற்றோர் குணம் பெறத் தேவையான அத்தியாவசிய இயன் மருத்துவ சிகிச்சைகளும் (Physiotherapy treatment) வழங்கப்பட்டு வருகின்றன. விசேடமாக யாழ். போதனா வைத்தியசாலையின் என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கே. உமாபதி அவர்கள் தனது வேலைப்பளுவின் மத்தியிலும் மாதந்தோறும் பல்வேறு தரப்பட்ட மாற்று வலுவுடையோரைப் பார்வையிட்டு, மேலதிக வைத்திய ஆலோசனைகளை இலவசமாக வழங்கி எமது பணி சிறப்புற உதவுவது அரிய வரப்பிரசாதமாகும்.

எமது இயன் மருத்துவ உதவியாளர்களால் (Physiotherapy Assistant) வாராந்தம் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அவயவம் இழந்தோருக்கான இயன் மருத்துவ நடவடிக்கைகளும் அவயவம் பொருத்துவதற்கு முன்னரான ஆலோசனைகளும் காலதாமதமின்றி உரிய நேரத்தில் அவயவங்களைச் சிறப்பாக பொருத்துவதற்குப் பெருந்துணையாய் இருக்கின்றது. மாற்றுவலுவுடையோரின் ஆற்றல்கள், திறமைகள் வெளிக்கொணரும் பொருட்டு கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுடன் துவிச்சரவண்டி, முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள் போன்றவையும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவைதவிர மாற்று வலுவுடைய பயணாளிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த சுழற்சி முறைக் கடனுதவிகளும், கல்வி நிலையை மேம்படுத்த கல்வி ஊக்குவிப்பு மானியமும் எமது நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. வெளிக்களப் புனர்வாழ்வின் மூலம் மாற்றுவலுவுடையோரை இனங்காணல் மற்றும் பயனாளிகளுக்கான தொடர்நிலைப் பரிசோதனை

போன்றவையும் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காலத்தின் தேவை

முன்னரைவிட அண்மைக் காலமாக பிறப்புடன் கூடிய தாக்கங்கள், மூளை முடக்குவாதம் (Cerebral palcy) நீரழிவு போன்றவற்றால் வலுவிழப்பு ஏற்படுவது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றுக்கும் மேலாக வன்னிப் பகுதியில் நிகழ்ந்த அண்மைய யுத்த அனர்த்தங்களினால் அளவிட முடியாத அளவில் மக்கள் உடல் ஊனமுற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வன்னிப் பகுதியிலிருந்து பெரும் பாதிப்புகளுடன் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் மாற்றுவலுவுடையோரில் 24 பேருக்கு செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டுள்ளதோடு தேவைப்பட்டோருக்கு 03 சக்கர நாற்காலிகளும், 02 முச்சக்கர வண்டிகளும், 28 ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பணிகள் யாவும் அனுபவம் மிக்க உள்நாட்டிலும் (கொழும்பு) வெளிநாட்டிலும் (வியட்நாம், அடிஸ்அபா, தன்சானியா, பெங்களூர்) பயிற்சி பெற்ற ஊழியர்களால் அர்ப்பணிப்புடன் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் வலுவிழப்புக்களுக்கு எதிராக எதிர் நீச்சல் போட்டு மறுவாழ்வு வழங்க எமது புனர்வாழ்வுப் பணிகள் முடிவின்றித் தொடர வேண்டியுள்ளது.

எம் இனிய மக்களுக்கு நாம் மனமுவந்து ஆற்றும் இப்பணி உரிய நேரத்தில் உரிய இலக்கை அடைய வேண் டும் என்பதே எமது வேணவா. இப் புனிதப் பணியில் நன்கொடையாளர், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எம்மோடு கரமிணைத்துச் செயற்படு

மாயின் மாற்றுவலுவுடையோர் முழுமை யான புனர்வாழ்வைப்பெறுவதுடன்அவர்களின்வாழ்வு இனிமையும் வளமும் பெறும் என்பது உறுதி.

எமது நன்றிகள்

ஆரம்ப காலம் முதல் இன்றுவரை எமது நிதிநிலை அறிந்து கைகொடுத்து உதவிய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், நலன் விரும்பிகள், உள்நாட்டு வெளிநாட்டு நன்கொடையாளர், விசேடமாக, தற்போது நிதியுதவி, இடைத்தங்கல் முகாம்களிலிருந்து மாற்று வலுவுடையோரை அழைத்துவரல், மூலப் பொருட்களை தடையின்றிப் பெற உதவுதல் போன்றவற்றில் உதவிக் கரம் நீட்டியுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு எமது நிறுவனம் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

கான்பெடரேஷன் கால்பந்தாட்டத்தில் பிரேசில் சம்பியன்

(ஜோகனஸ்பேர்க்)

கான்பெடரேஷன் கோப்பை கால்பந்து தொடரில் பிரேசில் அணி மூன்றாவது முறையாக சம்பியனாகி அசத்தியது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் அமெரிக்க அணியை 3-2 என்ற கோல்கணக்கில் வீழ்த்தியது பிரேசில்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில் 8ஆவது கான்பெடரேஷன் கோப்பை கால்பந்துத் தொடர் தென்னாபிரிக்காவில் நடந்தது.

இதில் ஸ்பெயின், இத்தாலி உள்ளிட்ட 8 அணிகள் விளையாடின. லீக் மற்றும் அரை யிறுதியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரேசில் மற்றும் அமெரிக்க அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இதன் இறுதிப் போட்டி ஜோகனஸ்போர்க்கில் நேற்று முன்தினம் நடந்தது. விறுவிறுப்பான இறுதிப் போட்டியின் 10ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் கிளின்ட் டெம்சி முதல் கோல் அடித்து முன்னிலை பெற்றுத்தந்தார்.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அமெரிக்க அணிக்கு 27ஆவது நிமிடத்தில் லான்டன் டொனோவான் மற்றொரு கோல் அடித்தார்.

பிரேசில் வீரர்களின் கோல் அடிக்கும் முயற்சி முதல் பாதியில் எடுபடவில்லை. ஆகையால் ஆட்டத்தின் முதல்பாதியில் அமெரிக்கா 2-0 என முன்னிலை வகித்தது.

2ஆவது பாதியில் எழுச்சி கண்ட பிரேசில் அணிக்கு லூயிஸ் பேபியானோ 46ஆவது மற்றும் 74ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து கோல் அடித்து 2-2 எனசமனிலைபெறச்செய்தார்.

பின்னர் இரு அணி வீரர்களும் கோல் அடிக்கப் போராடினர். இந்நிலையில் பிரேசில் வீரர் லூசியோ 84ஆவது நிமிடத்தில் கோல் அடித்து வெற்றிவாய்ப்பை பிரகாசப் படுத்தினார்.

ஆட்ட நேர முடிபில் பிரேசில் அணி 3-2 என்ற கோல்கணக்கில் அமெரிக்க அணியை வீழ்த்தி சம்பியனானது. ஆட்ட நாயகனாக பிரேசில் வீரர் காகா தேர்வு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் பிரேசில் அணி இத் தொடரில் 3 முறை (1997 எதிர்-அவுஸ்திரேலியா, 2005 எதிர்-ஆர்ஜன்டீனா, 2009 எதிர்-அமெரிக்கா) கோப்பையை வென்று உள்ளது.

ஒரு முறை (2001) நான்காவது இடம் பிடித்தது. பிபா கால்பந்து தொடர்களில் முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய அமெரிக்க அணி, கான்பெடரேஷன் தொடரில் முதல்முறையாக இரண்டாவது இடம் பிடித்தது.

இத் தொடரில் அசத்திய பிரேசில் வீரர் காகா-கோல்டன் போல் மற்றொரு பிரேசில் வீரர் லூயிஸ் பேபியானோ-கோல்டன் பூட்ஸ் மற்றும் அமெரிக்க அணியின் கோல் கீப்பர் டிம்ஹவோர்ட்-கோல்டன் குளோவ்ஸ் பெற்றனர்.

விம்பிள்டன் டென்னிஸ்
பெடரர்,வில்லியம்ஸ் சகோதரிகள் காலிறுதி சுற்றுக்கு முன்னேற்றம்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு முன்னேறினார் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர். பெண்கள் ஒற்றையர் காலிறுதிக்கு அமெரிக்காவின் செரினா, வீனஸ் வில்லியம்ஸ் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறியுள்ளனர்.

விம்பிள்டன் டென்னிஸ் தொடர் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றுப் போட்டியில் உலகின் நம்பர்-2 வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், சுவீடனின் ரொபின் சோடர்லிங்கை சந்தித்தார்.

பரபரப்பான போட்டியின் முதல் செட்டை பெடரர் 6-4 என கைப்பற்றினார். பின் டை-பிரேக்கர்வரை நீடித்த அடுத்த இரண்டு செட்டையும் பெடரர் 7-6,7-6 என தன்வசப் படுத்தினார்.

இறுதியில் பெடரர் 6-4,7-6,7-6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். இதே பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் ஜேர்மனி வீரர், டோமி ஹாஸ், ரஷ்யாவின் இகோர் ஆன்டிரீவ்வை 7-6,6-4, 6-4 என்ற நேர் செட்டில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

செரினா வெற்றி

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த 4ஆவது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், சுலோவேகியாவின் டேனியலா ஹன்ட் சோவாவை எதிர் கொண்டார்.

விறுவிறுப்பான இப் போட்டியில் செரினா வில்லியம்ஸ் 6-3,6-1 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், செர்பியாவின் அனா இவானோவிச் மோதினர்.

இதில் வீனஸ் 6-1,0-1 என முன்னிலையில் இருந்த போது இவானோவிச் காயம் காரணமாக விலகிக் கொண்டார். இதையடுத்து வீனஸ் வில்லியம்ஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

உசைன் போல்ட் முதலிடம்



(கிங்ஸ்டன்)

ஜமெக்கா சம்பியன்ஷிப் தடகளப் போட்டியின் 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமெக்கா வீரர் உசைன் போல்ட் முதலிடம் பிடித்து அசத்தினார்.

ஜமெக்கா சம்பியன்ஷிப் தடகளப் போட்டி கிங்ஸ்டனில் நடந்தது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமெக்காவின் உசைன் போல்ட் முதலிடம் பிடித்தார். இவர் பந்தய தூரத்தை 20.25 வினாடிகளில் கடந்தார்.

இவரைத் தொடர்ந்து ஸ்டீவ் முல்லிங்ஸ் (20.40 வினாடி), மேர்வின் அன்டர்சன் (20.63 வினாடி) அடுத்த இரண்டு இடங்களைப்பிடித்தனர். தவிர உசைன் போல்ட் கடந்த சனிக்கிழமை நடந்த 100 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடம் பிடித்துள்ளார்.

இந்தவெற்றியின்மூலம்உசைன் போல்ட் அடுத்த மாதம் பெர்லினில் நடக்கவிருக்கும் உலக சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்றுள்ளார்.

சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 93

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தலா 8 விக்கெட்டுக்கள் வீதம் மொத்தமாக 16 விக்கெட்டுக்களை வீழ்த்தி முரளிதரன் அசத்திய போதும் இலங்கை அணியால் தொடரை சமன் செய்யவோ வெல்லவோ முடியவில்லை.

மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய இலங்கை அணி 1997ஆம் ஆண்டு யூலையில் கொழும்பில் நடைபெற்ற பெப்சி ஆசியக்கிண்ண ஒரு நாள் தொடரில் விளையாடியது.

இத்தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய 4 அணிகள் மோதின.

இத் தொடரின் முதலாவது லீக் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை சந்தித்தது.

1997ஆம் ஆண்டு யூலை 14 ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இப் போட்டியில் இலங்கை அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் முரளிதரன் துடுப்பாட்டத்தில் ஆட்ட மிழக்காமல் 2 ஓட்டங்களை எடுத்த போதும் பந்துவீச்சில் விக்கெட் எதனையும் கைப்பற்ற வில்லை.

முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற இ பாலா அணி தொடரின் 3ஆவது லீக் போட்டியில் இந்திய அணியை சந்தித்தது.

1997ஆம் ஆண்டு யூலை 18 ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இப் போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இப் போட்டியில் சிறப்பாக பந்து வீசிய முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 30 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்த போதும் விக்கெட் எதனையும் வீழ்த்த வில்லை.

இவ் வெற்றியின் மூலம் தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற இலங்கை அணி லீக் சுற்றின் 5ஆவது போட்டியில் பங்களாதேஷ் அணியை சந்தித்தது.

1997ஆம் ஆண்டு யூலை 22 ஆம் திகதி கொழும்பு சிங்கள விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணியை 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவாக இலங்கை அணி வெற்றி கொண்டது.

இப் போட்டியில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

இந்நிலையில் 1997ஆம் ஆண்டு யூலை 26ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களையிழந்து 239 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்ட மற்ற ஓவர் உட்பட 38 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தா டிய இலங்கை அணி 36.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 240 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (பயணிக்கும்)

தெல்லிப்பளை பி.செயலகம் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலகப்பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ள மோட்டார் சைக்கிள் திருத்துதல், கையடக்கத் தொலைபேசி திருத்துதல் , கணனி வன்பொருள் திருத்துதல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வேறு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படும் எனவலி வடக்குபிரதேசசெயலர்எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார்.

(ந-5)

பயங்கரவாத...

நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு பிரிகேடியர் மேலும் கூறியதாவது,

மனிதாபிமான படை நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் 4 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 22 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

மனிதநேய நடவடிக்கைகள் முடிந்துள்ள போதும் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி முதல் இன்றுவரை 22 ஆயிரத்து 130 பேர் இராணுவத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

வன்னி, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களை இலக்காகக் கொண்டு மூன்று விசேட படைப் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன என்றும் பிரிகேடியர் கூறினார்.

(ந-5)

கடலின் கீழ்...

மின்சார வலையமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான யோசனையை ஊக்குவிக்கும் ஈரிடை திட்டமொன்றை இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே ஏற்படுத்திக் கொள்வது பற்றியும் சார்க் நாடுகளுக் கிடையே ஆராயப்பட்டு வருகிறது.

இலங்கை அதிக செலவிலான எரிபொருள் பாவனையை தவிர்ப்பதற்கும் இந்தியாவின் மேலதிக இருப்பிலிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்வதற்கும் இக்கேபிள் திட்டம் உதவியாக இருக்கும்.

இந்தியாவை பொறுத்த மட்டில் அந்நாடு எதிர்பார்க்கும் மேலதிக உற்பத்திக்கு இத்திட்டம் புதிய சந்தை வாய்ப்பை கொண்டு வரும்.

இந்தியாவின் உப இணைப்பு அமுலாக்கல் முகவர் நிலையமான அரச மின்மாற்றுப் பாவனை தொடர்பான மின் வலையமைப்பினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க அறிக்கையின்படி முதலீட்டு அங்கீகாரம் கிடைத்து 42 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யக் கூடிய இத்திட்டத்திற்காக 2ஆயிரத்து 292 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான மின் விநியோக ஆற்றலின்படி குறுகிய காலத்தில் சுமார் ஐந்நூறு மெகாவாட் மின் சாரத் தைப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும்.

இதன்மூலம் இந்தியாவில் தற்போது இருப்பது போன்று இரு நாடுகளின் பிரதேசங்களிலும் மின்னாற்றல் வீழ்ச்சியடையும்போது இரண்டு நாடுகளிலும் உச்சநேர மின்தேவையை சமாளிப்பதற்கு கடலின் கீழான கேபிள் திட்டம் உதவும்.

(ந-5)

இந்திய வெளி...

இலங்கைத் தூதுவர் நிரூபமா ராவ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

தற்போது சீனாவுக்கான இந்தியத் தூதராக நிரூபமா ராவ் இருக்கிறார். யூலை 31ம் தேதி முதல் நிரூபமா ராவ் புதிய பணியை ஏற்றுக்கொள்வார்.

(ந-5)

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து தப்பிய மூன்று இளைஞர்கள் கைது

சந்தேகத்துக்கிடமான முறையில் வவுனியா நலன்புரி முகாமில் இருந்து வெளியேறி கொழும்புக்கு சென்ற மூன்று இளைஞர்களை கொட்டாஞ்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மூவரும் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண கிராமங்களில் தங்கியிருந்தவர்கள் என்பது ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக கொழும்பு பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த பெரேரா தெரிவித்தார்.

வெளிநாடு செல்லும் நோக்கில் முகாமிலிருந்து கொழும்புக்கு தாம் வந்ததாக இம்மூன்று சந்தேக நபர்களினதும் விசாரணையின் போது தெரியவந்துள்ள நிலையில் முகாமிலிருந்து எவ்வாறு தப்பி வெளியேறி வந்தனர் என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசை சர்வதேச...

அது குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா வழக்குத் தொடர வேண்டும் என்று சட்டப்பேரவைத் தீர்மானம் நிறைவேற்றக் கோரி அ.தி.மு.க எம்.எல். ஏக்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டனர்.

அப்போது குறுக்கிட்ட முதல்வர் கருணாநிதி, அவைக்குள் கோஷமிடுவது பண்பற்ற செயல். எனவே அவர்களை வெளியேற்ற வேண்டும் என்றார்.

இதையடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற காவலர்களுக்கு பேரவைத் தலைவர் ஆர்.ஆவுடையப்பன் உத்தரவிட்டார்.

இந்நிலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சிகளான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

அவையில் இருந்து வெளியேற்றப்பட்டது குறித்து ஜெயக்குமார் (அ.தி.மு.க) சட்டமன்ற வளாகத்தில் வைத்துக் கூறியதாவது.

இலங்கையில் 50 ஆயிரம் தமிழர்கள் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். எனவே இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு உட்படுத்த சட்டசபையில் தனித் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவுறுத்தலின் பேரில சபாநாயகரிடம் அனுமதி கேட்டோம். ஆனால் அவர் அனுமதி தர மறுத்துவிட்டார்.

அதுபற்றி மீண்டும் அனுமதி கேட்டு பிரச்சினையை எழுப்பினோம். சபாநாயகர் முடிவெடுப்பதற்குள் முதலமைச்சர் எங்களை வெளியேற்றச் சொல்லி விட்டார். அதன் பிறகு சபாநாயகர் எங்களை வெளியேற்ற உத்தரவிட்டார் என்று கூறினார்.

(ந-5)

அரச சமாதான...

பேசியுள்ளபோதிலும் ஜனாதிபதி செயலகத்தினால் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில்இதனை மூடி விடுவதற்கான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை என இது தொடர்பாக கருத்து வெளியிட்ட சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் ரஜீவ விஜயசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இந்தத் தீர்மானம் எதற்காக எடுக்கப்பட்டது என்பதையிட்டு தனது கருத்துக்களை வெளியிடுவதற்கோ அல்லது இதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கோருவதற்கோ தான் விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதான செயலகம் மூடப்படாது என இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனக்கு உறுதியளிக்கப்பட்டதாக தெரிவிக்கும் ரஜீவ விஜயசிங்க, இப்போது இதனை மூடிவிடுமாறு தெரிவித்ததாகத் தெரிவித்தார். (ந-5)

மீட்டெடுத்த...

சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கு நியமனக் [illegible] தங்களை வழங்கும் வைபவத்தில் கல[illegible] கொண்டு உரையாற்றுகையிலேயே ஜ[illegible] பதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மேலும் அங்கு உரை[illegible] கையில்,

நாடு மற்றும் மக்களை முன்னோக்கியே சிறிலங்கா சுதந்திரக் கட்சி எப்போதும் தீர்மானங்களை எடுத்தது. அரசியல் அதிகாரத்தில் நீடிப்பதற்காக ஒரு போதும் சுதந்திரக்கட்சி தீர்மானங்களை எடுத்ததில்லை. நாட்டிற்காக எடுக்க வேண்டிய தீர்மானங்களை உரிய காலத்தில் மேற்கொள்வதற்கு நான் ஒருபோதும் பின் நிற்கமாட்டேன்.

ஒரு அணியாக செயற்பட்டு பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்தோம். அந்த சவாலை எம்மால் வெற்றி கொள்ள முடிந்தது. எனவே, எதிர்காலத்தில் அபிவிருத்தி எனும் சவாலை வெற்றிகொள்வ[illegible]காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்[illegible] வேண்டியது அவசியமாகும். (ந-5)

புதுக்குடி...

வைக்கப்பட்டிருந்த இந்த பாரிய குண்டுகளையும் ஏவியையும் மீட்டுள்ளனர்.

குண்டுகளை ஏவும் கருவி 28 அடி நீளமும் 5 அடி 10அங்குல சுற்றளவும் கொண்டது. நீர் மூழ்கிவெடி குண்டுகள் 26 அடி நீளமும் 5 அடி 7 அங்குல சுற்றளவும் கொண்ட வை எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(ந-5)

இப்பொழுது மானிப்பாயிலும் உங்களுடன்

குறைந்த கட்டணத்தில் அடையாள அட்டைப் படங்களைப் பிடித்திடவும் விரைவாக பிரதியாக்கம் செய்து பெற்றுக் கொள்ளவும்

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

யாழ். வீதி, மானிப்பாய். (பிரதேச சபை முன்பாக)

(C-2691)

படிவம் விற்பனையாகிறது

DFCC வர்தன வங்கி

யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு கீழ்வரும் பதவிநிலைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

1. கிளைமுகாமையாளர்
2. பொறுப்பதிகாரிகள்
3. உதவி முகாமையாளர்கள்
4. முகாமைத்துவ பயிற்சியாளர்கள்
5. வாடிக்கையாளர் தொடர்பு அதிகாரிகள்
6. கருமபீட காசாளர்கள்
7. வரவேற்பாளர்களும் செயலாளர்களும்

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.04, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

தொ.பேசி - 6693,4374,2422 (C-2692)

விற்பனைக்கு

சன்டெல் ரெலிபோன் விற்பனைக்குண்டு.
மொபிடல் றிலோட் சிம்காட்,
மொபிடல் பகேஜ்சிம்,
சிமாட் சிம்காட்
மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மொபிடல் சப் டீலர்

P.C.SYSTEMS MANIPAY

T.P:-0777917790,0718034198 (2894)

தவறவிடப்பட்டுள்ளது

இல. 59-9837 இந்த வாகனத்திற்குரிய சகல ஆவணங்களும்யாழ்.நகரில்தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். கண்டெடுப்பவர்கள் 0774895744 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(2895) க.ரவீந்திரதாசன்

Trinity College And University

(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C. INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

Jaffna Road, Manipay - T.P.No :- 060 - 221 - 6433

எமது மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

மேற்படி எமது பல்கலைக்கழகத்தினுடைய அனைத்து பட்டப்படிப்புக்களும் 04/07/2009 அன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் அனுமதி விண்ணப்ப படிவம் பெற்ற அனைத்து மாணவர்களும் 03/07/2009ம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

Mobile :- 0777 - 110862

Mr.S.Selvathashan, Coordinator (North)

MEGA SALE WITH OFFER தரம் அதுவே நிரந்தரம்

PC-1
2.2 GHz DUAL CORE (3 YEARS)
ASUS MOTHER BOARD (1 YEAR)
1GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
17" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
UPS (POWER THREE) (1 YEAR)
51,500/=

PC-2
2.2 GHz DUAL CORE (3 YEARS)
FOXCON G31 MX (1 YEAR)
1GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
17" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
2 IN 1 CREATIVE WOFFER
UPS (POWER THREE) (1 YEAR)
COMPUTER TABLE
59,000/=

PC-3
2.2 GHz DUAL CORE (3 YEARS)
FOXCON G31 MX (1 YEAR)
1GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
16" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
UPS (POWER THREE) (1 YEAR)
50,000/=

PC-4
1.6 GHz DUAL CORE (1 YEAR)
INTEL 945 GCLF (1 YEAR)
1 GB DDR-II (1 YEAR)
250 GB HDD (1 YEAR)
16" VIEW SONIC LCD (3 YEARS)
ATX CASING
KEY BOARD
OPTICAL MOUSE
ASUS DVD WRITER (1 YEAR)
UPS (POWER THREE) (1 YEAR)
43,500/=

MARSHA SYSTEMS (Pvt) LTD

74, Kannathiddy Road, Jaffna. T.P:- 021 222 9418

(C-2689)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.